Registered at the G. P. O. AS A NEWSPAPER

சன்மார்க்கபோதினி.

LIBRARY
2 -- 1995
UNIVERSITY OF JAFFNA

SANMARKA POTHINI

பத்திராவிலைவிகிதம்
ஊர்க்கு ரூபா உ-00
தபாற் செலவு
இலங்கைக்கு சதம் [illegible]
இந்தியாவுக்கு சதம் [illegible]
பிறதேசங்களுக்கு [illegible]

விளம்பரவிலைவிகிதம்
வரி ஒன்றுக்குச்சதம் [illegible]
[illegible] க்குமேல்ஒருவரிக்கு 9
[illegible] க்கு மேல்.........8
இணைப்பிரசுரமொன்றுக்கு [illegible] ஒன்று

ஒன்றுவிட்டொருசெவ்வாய்க்கிழமைகளிற்
பிரசுரஞ்செய்யப்படும்

சாதுசங்கஞ் சன்மார்க்க சாதனம்.

Published on every
other Tuesday

VOL. XXXIII. JAFFNA JANUARY 9th 1917. No 1

௩௩ம் புத்தகம் யாழ்ப்பாணம் ௧௯௧௭ம் ௵ தை ௴ ௯௳ செவ்வாய்க்கிழமை. சங்கியை ௧

1917 ம் வருஷமும் நமது பத்திரிகையும்.

இவ்வருட ஆரம்பத்துடன் நமது பத்திரிகைக்கு 33ம் வயசு தொடங்குகிறது. சென்ற 32 வருடங்களாய் நமதுபத்திரிகை கிரமந்தவறாது வெளிவந்து இப்பத்திராபிமானிகளைச் சந்தோஷிக்கச்செய்து அருணைத்தாற்றேற நற்போதனைகளையூட்டிப் புதினைச்சந்திகளைச்சேர்ட்டி நிலையை நிலைகாட்டிவந்திருக்கிறது. சென்றவாண்டு முன்னெவ்வாண்டிலுமில்லாத தொல்லைகள் நமக்குநேரிட்டும் நாம் இதை வெளியிடத் தவறினதில்லை. ஆயின் அத்தொல்லைகள் இன்னும் நம்மைவிட்டு நீங்காதிருப்பினும் நாம் இன்னுந் தைரியத்தைக் கைவிடாது 33ம் புத்தகத்தையும் ஆரம்பிக்கத் துணிந்தோம். இதற்கு முன் நம்முடன் கூடவிருந்து நமக்கருள்புரிந்துவந்த பரமகடவுள் இவ்வருடத்தும் நம்முடன் கூடஇருந்து நாமும் நமதுபத்திரிகையும் நம்பத்திராபிமானிகளும் வருவருடாரம்பத்தைப் காணவும், இப்பத்திரிகை அதுவரையிலாயினும் கிரமமாய் நடைபெறுவதவும் கிருபைசெய்வாராக.

நம்பத்திராபிமானிகளும் நம் நன்மையுணர்ந்து முன்னில்லாதவூக்கத்துடன் நம்பத்திரிகையை ஆதரித்துப் புதுக் கையொப்பக்காரரையுஞ் சேர்த்துத்தந்து உதவிசெய்யுமாறு கேட்கிறோம். மேலும் அவர்கள் இதுவரையிற் செய்த உதவிக்காக வந்தனங்கூறி இவ்வருடத்து முதலாஞ்சஞ்சிகையை வெளியிடுகிறோம்.

சுந்தரன் செய்த தந்திரம்.

25ம் இலக்கப் பத்திரத் தொடர்ச்சி.

உரக்கத்தைப்பதிகொடுத்துப் பதைபதைத்தாண்டாரங்கள் "தலைதப்பினது தம்பிரான்புண்ணியம்"என்றுசொல்லி ஒடிப்போய் ஒரு பற்றைமறைவிலிருந்துயோசிக்கலானார்கள். நாங்கள் பணங்கொண்டுவந்தது இருடருக்கு எப்படித்தெரியும்? வீரசாமியின் செய்கைதானோ? அவன்தான் ஆசையாகுதல் ஏவிவிட்டிருக்கலாமென்று தீர்மானித்து மனநொந்து விடிந்தபின் பாதையில் ஒருவருமில்லையென்றுகண்டு மறுபடி திரும்பித் தங்கள் ஊரைநோக்கிச் சென்றார்கள். சென்றவர்கள் அன்றுபின்னேரம் அங்கு சேர்ந்து கூட்டாளிகளை மனக்குறைவுடனே கண்டார்கள். அவர்கள் இவர்களைகண்டவுடனே "அகத்தினழகு முகத்திலேதெரியு"மென்றபடி ஏதோ அபாயம்நேரிட்டிருக்கலாமென்றெண்ணி அவர்களைநோக்கி ஏதப்பா திரும்பிவிட்டீர்களென்றுஆச்சரியமாய்க்கேட்டார்கள். அதற்கவர்கள் அப்பப்பா! இந்தத் துட்டப்பயல் வீரசாமியின் ஏவலாலக்கும் திருடர்வந்து எங்களையும் அடித்துப் பணத்தையும் பறித்துக்கொண்டுபோனார்கள். இதைப்போக்கிலிதான் ஏன் பணத்தைக்கொண்டுபோகிறீர்கள், இதை நாங்கள் பகிர்ந்துகொள்ளுவோமென்று ஓடிவந்தான். நாங்கள் அலைத்தட்டிப்போட்டுப்போய் இந்த ஆபத்துக்குள்ளானோம். சுந்தரனுக்குஎன்னமறுமொழிசொல்லப்போகிறோம். நாங்கள் பணத்தை எடுத்துக்கொண்டு தந்திரம் விளையாடுகிறோமென்றல்லோநினைப்பான். தெய்வமே இதற்குப் போம்புத்தியென்னவென்று குழறினார்கள். அதைக்கேட்ட வீரசாமி அடே முட்டாட்களே, நீங்கள் இப்படிச்சொனல் சுந்தரன் என்னநினைப்பான். "உழிய முழிகாயும்வந்தது"போலேயல்லவா என்பாடு வந்திருக்கிறது. நான் பகிடிக்குச் சொன்னதைச் சாட்டாய் வைத்துக்கொண்டு நீங்கள் பணத்தை எடுத்துக்கொண்டா என்னைச்சாட்டப்பார்க்கிறீர்கள்! என்றான். அதைக்கேட்டவர்கள் திடுக்கிட்டு ஓகோ! மறுபுறத்தால் நம்மிலாபொழிக்கப்பார்க்கிறாய்! தெய்வமே! இதற்கு நாமென் செய்வது: வீரசாமி! நாங்கள் "உன்னைத்தச்சொன்னால் உடம்பெல்லாம்புண்ணு"? நீ இந்தப்பணத்தை நாங்கள் எடுத்துப் பங்கு போடுவோம் என்று கேட்டாயா இல்லையா என்றார்கள். கேட்டதற்காக நானு உத்தரவாதி, நான்கேட்டது உங்களுக்கு வாய்ப்பாயிற்று. இனி உங்கள்பாடு குசால்தான். நீங்கள் "சவிப்பில்லாப்பெண்கள் சாவீட்டில் மாரடிப்பதுபோல" வயிற்றில் அடிக்கிறீர்களே என்றான். இதைக்கேட்டிருந்த மற்றோர் வாக்குவாதத்தை நிறுத்துங்கள், வீரசாமி எங்களுடனும்பிணங்கிக்கொண்டு சாப்பிடாமலும் இங்கேயே கிடந்துவிட்டான். ஓரிடமும் போகவில்லையே! "அகதிதலையில் பொழுதுவிடிந்தது" போலே அவன்தலையில் வீணாய்ப் பழிசுமத்தாதிருங்கள். எங்களுக்குள் ஒற்றுமையில்லாமல் வேறுபட்டால் காரியம் மோசந்தில்வந்துவிடும். "சினத்தாற்போல் அறுத்தாழ்ந்துச் சிரித்தாற்போல் ஒட்டுமா"? விண்வாதத்தை விட்டுவிடுங்கள். "கொங்கு தின்றவன் தின்னக் கோம்பை குப்பியவனை [illegible]"? [illegible] ஞ்செய்ததை ஆரோ கேட்டிருந்து "இருவர் பசுவுக்கு வழக்குப்பேச இடையிலிருந்தவன் பாலைக்கறந்து குடித்தது"போலச் செய்துவிட்டான். பேசாதிருங்கள் என்றார்கள். இப்படி இவர்கள் விவாதப்பட்டுக்கொண்டிருக்கையிலேயே சுந்தரன் எதிரே வருவதைத்தோற்றினது. அவன் சமீபித்தவுடனே எல்லோரும் அமைதியாயிருந்து அவன்முகத்தை எதிட்டுப்பார்த்தார்கள்.

(வரும்)

பதார்த்தசாரம்.

வெள்ளைப் பாஷாணம்.

White Arsenic.

இது மற்றைய லோகங்கள்போலக் கந்தகத்துடன்சேர்ந்து பூமியின்விளைந்து எடுக்கப்படும் அரிதாரம் மனோசிலையிலிருந்து செய்யப்படுகிறது. இதைக்காற்றுப்பட எரித்து வெள்ளைப்பாஷாண மாக்குவார்கள். வெடியுப்புத்திராவகத்துடன்சேர்த்துக்காய்ச்சினாலும் வெள்ளைப்பாஷாணமாகும். இதுசலத்தில் அதிகம்கரையாது. வெந்நீர் வெடியுப்புத்திராவகத்திலகரையும். காந்தம், சுண்ணாம்புத்தண்ணீர் இதற்குச சத்துருப்பதார்த்தங்கள். இதனால், சீதசுரம், விஷசுரம், முகவாதசன்னி, உதடைவாதரோகம், காக்கைவலி, ஒருவியாதி காட்டபட்டதில்வாதம், விப்புருதி, பெரும்பாடு, நாட்பட்டசருமரோகங்கள், சரப்பன், கட்டி, கொப்புளம், சர்ப்பக்கடி, நாட்பட்ட இருமல், அதிதுலரோகம, குன்மம், அசிரணம், அதிசாரம், சூதகாசன்னி ஸ்திரிகள் பக்குவமாகும் வயசிறகாணும் பாண்டுரோகம், இரத்தப்பூத, சூதகக்கட்டு, அஸ்திரத்தபித்தரோகம, காமாலை,மதுமேகம், முகத்தல் சதையை அரித்துத்தின்றுகொண்டுபோகும் ரணம், கண்மடல்விரணம், ஒருதலைவலி, குக்கல, தல்லிக்கிறுதி இவைமாறும். சொத்தைப்பல்லுக்கு அபினிசைதராகிய மோர்பியா கார்பலத் திராவகம் இவைகளுடன்சேர்த்துப் பிசின்போற்செய்து 1 முதல 6 கிறேன்வரையில் வெளிப்பிரயோகஞ்செய்யலாம். இதைப் புண்களுக்கு இடும்வழக்கத்தைநிறுத்தவேண்டும், ஏனெனில் இரத்தத்தில கலந்து துர்க்குணஞ்செய்யும. இதை உள்ளுக்குக்கொடுக்கும்போது சாப்பிட்டு ஒருமணி இரண்டுமணியின்பின்னரே கொடுக்கவேண்டியது. இதைக்கொடுக்க ஆரம்பிக்குமுன் பேதிக்குக்கொடுத்துப் பழமலத்தைப் போக்கவேண்டும். மிகக் குறைந்தஅளவிற்கொடுக்கவேண்டும். பாஷாணமசாப்பிடும் நோயாளியின் கண்களை நாள்தோறும்பார்வையிடவேண்டும். கண்சிவந்து சொறிவுண்டானாலும் இமைபபை பாரமாயிருந்தாலும் மருந்தை நிறுத்திவிடவேண்டும், மூத்திரம் குறைந்து சிவந்திருக்குமானாலும் நிறுத்திவிடவேண்டும். இருமலுண்டானாலுங் கொடுக்கக்கூடாது. கண் இமைப்பைக்கள் தடித்திருப்பதும் சூடு சொறிவுண்டாயிருப்பதும் மருந்து உடம்பிற்பற்றினதற்கடையாளம். பாஷாணப்பிரயோகஞ்செய்யும்போது இரண்டுமூன்றுவாரத்துக் கொருமுறை மருந்தைநிறுத்திப் பேதிக்கக் கொடுத்துவரவேண்டும். இம்மருந்து ஓக்காளத்தையாவது வாந்தியையாவது உண்டாக்கினால் அபினிராவகத்தைச்சேர்த்துக்கொடுத்தால் தாக்குணம்நீங்கும். ஒருகிறேன் வெள்ளைப்பாஷாணத்தை 10 பங்காய்ப்பிரித்து அதில் ஒருபங்கை 3 கிறேன் மிளகுதூளுடன் சேர்த்துச் சேன்வட்டரைத்து ஒருமாத்திரையாயுருட்டி வளர்ந்தவர்களுக்குக் கொடுக்கலாம். பாஷாணம் கொடியநஞ்சு, அதை விஷமுறிக்கும்படி தின்றால் வாந்திக்குக்கொடுத்து வயிற்றிலிருப்பதைவெளிப்படுத்திவே [illegible] ண்ணீராவது கொடுக்கலாம். பலமிருக்கும்படி அபினைகொடுத்துச் சிற்றாமணக்கெண்ணெயை அடிக்கடி கொடுத்துவரவேண்டியது. கோழிமுட்டைவெண்கரு கடுக்காய் கறியுப்பு அவுரிவோ இலைகளின் கஷாயங்களையுங் கொடுக்கலாம்.

கையொப்பவரவு.

T. Canaga Sabapathy Esq. Shroff modaliar	2-00
V. G. Thambyaiah Esq. Kurnegalle	2-50
மேஸ். வி. சின்னப்பு முகமாலைத்தோட்டம்	7-00
" ம. வயித்தியாம்பிள்ளை சலாபத்துறை	6-00

யாழ்ப்பாணம்.

ஊர்ச்சீர்—குளிர்காற்றதிகம். அதனால் தடிமன் காய்ச்சலாதியரோகங்கள் தலைகாட்டுகின்றன. மந்தாரமன்றி மழையில்லை.

யாழ்ப்பாணமேற்றிராணியார் – இவர் வல்லுவெட்டித்துறைக்கு நாளைக்குவரவிருக்கிறார். அங்குள்ள கிறீஸ்தவர்கள் கண்ணியமான மரியாதைசெய்து அழைக்கக் காத்திருக்கிறார்கள்.

வலிகாமங்கிழக்கு மணியகாரனவர்களின் உபசாரணைக் கொண்டாட்டம்.

1916ம் ௵ மார்கழி ௴ 24௳ கூடிய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டபடி சென்ற 3௳ புதன்கிழமை மேற்படி மணியகாரனவர்களை வரவழைத்து அச்சுவேலி இங்கிலீஷகலாசாலையில் பாவாலும் நாவாலும் துதித்து வாழ்த்துப்பத்திரமும் வாசிக்கப்பட்டன. அவர் வரும்வழியில் ஆவரங்காலிலும் ஓர் பந்தரிட்டுச் சோபனபாக்களைப்பாடி வாழ்த்தினர். அச்சுவேலி எல்லையை யடைந்தவுடன் வாச்சியகோஷத்துடன் யாவரும் அவரை எதிர்கொண்டழைத்துவந்து ஸ்ரீ ச. பொன்னம்பலம் அவர்களலங்காரஞ்சார்த்தப்பட்ட ஆசனத்தில் காரசெய்து அத்தருணத்துக்கேற்ற கீர்த்தனங்களைப் பாடி, ஸ்ரீ சி. செல்லையாபிள்ளையவர்களால் ஓர்வாழ்த்துப்பத்திரம் வாசிக்கப்பட்டது. அவ் வாழ்த்துப்பத்திரம் வருமாறு:—

"மகிமைபொருந்திய ஐயா!

வலிகாமங் கிழக்குப்பகுதிக்குத் தாங்கள் மணியகாரராய் நியமனம்பெற்ற அதிமங்கள சந்தியைப்படித்து மிகுந்த ஆனந்தமடைந்து, முதலாவது கடவுளைத்துதித்து, தங்களை இந்தப்பதவிக்கு நியமித்த அரசில் மிகுந்த இராசபத்தியுடையவர்களாய்த் தங்களுக்கு எங்கள் இருதயம்நிறைந்த நன்றியை அறிவித்து உள்ளன்போடு உங்களை வாழ்த்துகிறோம்.

துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனராய்ச் செங்கோல்செலுத்தும் அன்பார்ந்த ஆங்கிளஅரசின் காருண்ணிய ஆளுகையின்கீழ் நாம் வசிக்கப்பெற்ற அருஞ்சலாக்கியமும் பெரும்பாக்கியமும் பூமுகத்தில் அனேகர்க்குக்கிடையாப் பெரும்வாழ்வுகளாம். இப்படியான தருமஅரசின்கீழ் நாம் வசிக்குஞ் சலாக்கியம்பெற்றும், எம் அரசரும் அவரின் பிரதிநிதராய ஆளுகைசெலுத்துந் தேசாதிபதி முதலியவர்களும் நீதிவழுவாது இரக்கம்பாராட்டிச் செங்கோல்செலுத்துந் தன்மையராயிருந்தாலும், அவ்வரசினரால் நியமிக்கப்பட்ட தலைமைக்காரர் பலர் நீதிநெறிதவறிப் பிரசைகளையொடுக்கித் தஞ்சுகத்தையும் தம்வாழ்வையும்மாத்திரம்நோக்கி உத்தியோகம் நடத்தினமையால் நாமும் நம்நாடும் பலமுறைகளிலும் பல கஷ்டநஷ்டங்களையும் அனுபவிக்கநேர்ந்தது. அதனால் எம் ஆங்கிளஅரசின் நல்வாழ்வுகள் "கைக்கெட்டின வாய்க்கெட்டவில்லையே" என்று பலமுறையுந் தவித்துப் புலம்பி நாம் ஒருவரையொருவர் விரோதித்துக் கலகித்து வழக்காடிப் பணமிழந்து பொருளிழந்து மயற்கியிழந்து சந்தோஷமிழந்து பிரலாபிக்கலாயினோம். இப்படியான நிலைமையிலிருந்த நாங்கள், உயர்ந்த மதிப்பும் பெரும் பொருளீட்டுந்தன்மையும் பிறர் அதிகாரத்துக்குட்படாது தன்னிஷ்டமாய்ச் சீவிக்குந் தகைமையும்பூண்ட அப்புக்காத் உத்தியோகத்தைவிட்டு லோகோபகாரமாய்ப் பிரசைகளாகிய எங்கள் நல்வாழ்வைநாடி இந்த விசேஷஉத்தியோகத்தைத் தாங்கள் விரும்பினதையும், "தக்கஇடத்திற்குத் தக்கமனுஷன்" என்று ஆன்றோர் கூறிய வாக்குப்படி, வலிகாமங் கிழக்குப்பகுதிக்கு இத் தலைமைஉத்தியோகத்தைவகிக்க எல்லாவகையிலும் முதன்மைபெற்றுச் சிறந்துவிளங்கும் பிரபு இவரேயென்று அரசினர் அறிந்து நன்குமதித்துத் தங்களை இப்பதவிக்கு நியமித்ததையுங் கேள்விப்பட்டபொழுது அச்செய்தி எங்கள் கன்னபாகங்களுக்குச் "சர்க்கரைப் பந்தரிற் றேன்மாரிபொழிந்தாற்போல்" அதிமதுரசங்கதியாய் ஆனந்தத்தை விளைவித்ததில் அதை உங்களுக்குத்தெரிவித்து உங்களை வாழ்த்துகிறோம்.

எங்கள் குறைமுறைகளைச்சரியாயுணர்ந்து எங்களோடு அநுதாபப்படும் பேரன்பும், காரியங்களைப் பகுத்தறியும் கூரியவிவேகமும், பாரபட்சமின்றி நீதிபுரியுஞ்சிறப்பும், பொறுமை, தயவு, பரோபகாரமாதிய குணங்களனிறைந்த பெருந்தன்மையும் பூண்ட பிரபுவாகிய நீங்கள், இந்த உத்தியோகத்தைச் செம்மையாயநடத்தி அரசினருக்கும் பிரசைகளுக்கும் அதிக உதவியாய்விளங்கி உங்கள்உத்தியோககாலத்தில் நாங்கள் அதிக சந்தோஷமுஞ் சமாதானமுமாய்வாழ்ந்து சுகித்திருக்குமாறு செய்வீர்களென்று உண்மையாய் உணர்ந்து உங்களை வாழ்த்துகிறோம்.

யாழ்ப்பாணத்திலே எல்லாவகையினுஞ் சிறுஞ் சிறப்புப்பெற்று உயர்ந்து மேன்மை பூண்டுவிளங்கும் விசேஷ தொல்குடிப்பிறப்பும், பல அடிமை குடிமைகளைப் பட்சமாய்நடத்தி ஆதரித்து அனேகசந்ததியாய் நாட்டாண்மை அதிகாரஞ்செலுத்திப்பெரும் பிரஸ்தாபமும்பெற்று விளங்கிய பலபிரபு

க்கள் வமிசப்பிறப்பும். யாழ்ப்பாணத்திலே சிங்கக்கொடியினராம் ஆங்கிலஅரசர் ஆளுகையின்கீழ் முதலாஞ் சுதேசநீதிபதிஉத்தியோகம்பெற்று அரசினரும் பிரசைகளும் மகிழ்ந்துகொண்டாட அந்தஉத்தியோகத்தை மிகத் திறமையாய் நடத்தி அதிககீர்த்திபெற்ற ஸ்ரீமான் அம்பலவாணத்துரையவர்களைப் பௌத்திரராகவும், திசையெங்கும் இசைபெற்றுச் சுதேசிகளாலும் ஐரோப்பியர்அமெரிக்கர்முதலிய பரதேசவாசிகளாலும் போற்றிப் புகழப்பட்ட சற்குண பரோபகாரவள்ளலும், அரசினரால் சமாதானநீதிபதி, கண்ணிய பொலிசுநீதிபதி என்னும் பட்டங்களைப்பெற்று யாழ்ப்பாணச் சனசங்கத்தின் சிரோரத்தினம் எனக் கூறற்கிலக்காய் முதன்மைபூண்டுவிளங்கிய மகாப்பிரபுவுமாகிவாழ்ந்த ஸ்ரீமான் அ. மயில்வாகனத்துரை அவர்களைத் தந்தையாராகவுங்கொண்ட தங்கள் உத்தியோககாலத்தில் முன் எக்காலத்திலும் நாம்பெறாத சிறப்புகளைப்பெற்றுச் சவுக்கியமாய்வாழும் பெருஞ்சவாக்கியம்பெறுவோம் என்பதை நிச்சயமாய் அறிந்து அதிகமகிழ்ச்சியோடும் எங்கள் முழுஅன்போடும் உங்களை வாழ்த்துகிறோம்.

எம் ஆங்கிலஅரசின் நற்பிரியமும் சன்மானமும் இன்னும் அதிகம் அதிகமாய்ப் பெற்றுத் தாங்களும் தங்கள் குடும்பமும் தங்கள் சந்ததியும் வாழவும், பிரசைகளாகிய எங்கள் நன்மைக் கேதுவாய்த் தாங்கள் உத்தியோகம்புரியவும், ஞானம் முதலிய கல்விவுகளைக் கடவுள் தங்களுக்கு அதிகமாய்த் தரவேண்டுமென்றும் விரும்பி நாம் வழிபடு கடவுளை வணங்கி உங்களை வாழ்த்துகிறோம். எங்கள் வாழ்த்துதல் இனிதுமுடியக் கடவுள்தங்களை ஆசிர்வதிப்பாராக. இங்ஙனம், அச்சுவேலி வாசிகள்”

இதற்கு மணியகாரன் தக்க பதில்கூறி இவ்வூரில் கலகமுதலியவைகள் நடக்கக் கூடாதென்றும், கோட்டுக்குப்போகாமல் தக்கமனுஷரால் தீர்த்துவிடப்படுமென்று காத்திருப்பதாயும் பகர்ந்தனர். பின்னர் கனம். E. T. உவில்லியம்ஸ் போதகர் ஆதியரால் பிரசாரணங்கள் கூறியபின் கூட்டம் சமாப்தியாயிற்று.

இதில் நாம் சொல்லவேண்டிய குறிப்புரையொன்றுண்டு. இவ்வுபசரணைக்கொண்டாட்டம் முன்னில்லாதவிதமாய் நடத்தப்பட்டாலும் பேசிய பாஷிகத்தில் நம் நோக்கங்களுக்கு அதிகமாய் அனவசிய பிரசாரணஞ் செய்யப்பட்டதால் மிகுதியாயுள்ளவர்க்குப் பேச இடங்கிடையாமற் போயிற்று. இது நம்மால்நேர்ந்தகுறையென்றே விளங்கினோம். நாம் இன்னார் இன்னார் இன்னவிஷயத்தைக்குறித்து இவ்வளவுநேரத்துள் பேசவேண்டுமென ஒழுங்கு செய்திராததையிட்டுத் துக்கிக்கிறோம். என்றாலும் “சூழஓடியும் வாய்க்காலுள்” வந்து யாவரும்நமதுமணியகாரனின்மேல்வாழ்த்தொலிகூறியதும் பேசஇருந்தவர்களும் மனமிசைந்து தம்பேச்சைநிறுத்தித் தக்க நேரத்தில் முடித்துப் பின்னபேதமின்றி நடந்துகொண்டதும் வியப்பிற்குரியது. இக்கூட்டம் அவர் மணியகாரனுவதை யாவரும் பின்னபேதமின்றி மதித்தேற்றனரென்பதைக் கரதலாமலகம்போல விளக்கியது. அரசினரும் பொதுச்சனப்பிரமானமுள்ளஒருவரையே இனிமேல்உத்தியோகத்தில் நியமிக்கவேண்டுமென்னுணரவும்வழியாகிறது. அவரைக்குறித்து அவ்விடத்திற்சொல்லச் சாவகாசமின்மையால்விட்ட ஓர்வசனம் இங்கு கூறவேண்டியிருக்கிறது. அதாவது;—இவர்தம் அத்துவக்காத் அந்தஸ்தைவிட்டு எமக்குதவிசெய்ய எம்முடன் கலந்துகொண்டது யாழ்ப்பாணமணியகாரர்களின்பதவியை மேல்மாகாணம் நடுமாகாணங்களிலுள்ள ரட்டைமாத்தையா என்னும் அதிகாரிகளின் அந்தஸ்துக்கு உயர்த்தியிருக்கிறது என்பதே! இவர் பூரண ஆசிசுபெற்றுத் தாம்கொண்டிருக்கும் நன்னோக்கத்தை நிறைவேற்றத் தயாபரகடவுள் கிருபைபாலிப்பாராக.

விடுதலைநாட்கள்—நத்தார் வருட லீவில் பல உத்தியோகஸ்தர் தம்மில்லிடம்வந்து மீண்டு திரும்பி உத்தியோகஸ்தானம்போயினர்.

மேனக்கலிப்பிலி—மானிப்பாயைச்சேர்ந்த சுதுமலையில் பரம்பர சாகிட்டுக்கு மேளமடித்ததினுல் கலாதியுண்டாய்ப் பொலிசர்போய்த் தடுத்துக்கேளாமையால் பொலிசுப்பட்டாளஞ்சென்று நலகக்காரரில் 42 பேரைப் பிடித்துப்போயிற்றும். கோட்டில் வழக்குநடக்கிறது.

புகையிலைச் செய்கை—ஐரோப்பியரின் பாவனைக்கேற்றபடி செய்யப்படும் புகையிலைச்செய்கை வரும்வருடம் யாழ்ப்பாணத்திலும் தெல்தேனியாவிலும் செய்கைபண்ணப்படுமாம். யாழ்ப்பாணப்புகையிலையில் குளோரின் எனும்பதார்த்தம் அதிகமாயிருப்பதால் அது ஐரோப்பாவுக்கு ஏற்றக்கூடாதிருக்கிறதாம். அதைப்பாவித்தால் நீரிழிவுண்டாகுமாம். மாட்டுச்சாணியை எருவாய்ப்பாவிப்பதே இப்பதார்த்த மதிகரிக்குங்காரணமாம். யாழ்ப்பாணத்தில் பலவகை நிலங்களுண்டு அவைகளில் மாறிமாறிச் செய்துபார்த்தால் நன்மையுண்டாகுமென்று நம்புகிறோம்.

யாழ்ப்பாணமும் புத்தரும்—யாழ்ப்பாணத்தின் பெரியகோட்டு நீதிபதியான மெஸ். ஈ. பீரிஸ் அவர்களின் முயற்சியால் சுன்னாகம் புகையிரத ஸ்தானத்துக்குத்தெற்கே 300 யார்தூரத்தில் புத்தரின்புராதனபுத்தசமாதியொன்று காணப்பட்டதாம். அவ்வூரின்பெயரும் ஓர்காலம் அவ்வூர் சிங்களநாடாயிருந்ததென்பதைக் காட்டுகிறது. சுன்னகம, மல்லகம, வீமகம என்னும்பெயர்கள் நாளடைவில் சுன்னாகம், மல்லாகம், வீமன்காமம் என மாறிவந்திருக்கிறது. நம்மூரிலும் புத்தகோயிலடி என்றழைக்கப்படும் ஓரிடமுண்டு. காம்பியவத்தை, தெகிளாவத்தை, உடும்பிலாவத்தை முதலிய காணிப்பெயர்களும் சிங்களரிட்ட நாமமாகவே காணப்படுகிறது. நம்மூர்க்கடுத்துள்ள புத்தூரில் புத்தகலட்டியென்று ஒன்றிருக்கிறது. அவ்வூர் நாமமுஞ்சிலவேளை புத்தசமயிகள் வசித்ததினுல் வந்திருக்கலாம். நமது அச்சியந்திரசாலைஇருக்குமிடத்தின்பெயர் தம்பக்கோனை என்றழைக்கப்படுகிறது. இதைபொத்துச் சிங்களநாட்டில் தம்பகாகேனை என்னுந் தோட்டமிருக்கிறது. இங்கேகாலானை என்றஇடமிருக்கிறது. அங்கே காலாவுவா என்றதிருக்கிறது: போயிட்டி, கரைவைபிட்டி, மயிலிட்டி, தோலைபிட்டி, விழுசிட்டி, உடுப்பிட்டி, வல்வெட்டி, சிறுப்பிட்டி, எனும்பெயர்களும் சிங்களச்சொற்களின் திரிபென்று நம்புகிறோம். யாழ்ப்பாணத்தின் பூர்வசரித்திரம் உண்மையாம்படி எழுதப்பட்டிராமையால் புராதன சின்னங்களைக்கொண்டாயினும் ஆராய்தல்நன்றும்.

தேசாதிபதிவரவு—நமது தேசாதிபதியவர்கள் 22உ முதல் 24உ வரைக்கும் யாழ்ப்பாணத்திற்குத் தரிசனை கொடுப்பார். இதைக்குறித்த கூட்டமொன்று சென்ற வெள்ளிக்கிழமை பிச்சுவேமண்டபத்தில் நடைபெற்றது. அதற்கு நமதேசன்றர் சபாநாயகராயிருந்தார்.

ரோட்டுக்குத்தாரிடல்—யாழ்ப்பாணப் பட்டினத்தில் பெருந்தெருவுக்குத் தார்போடத் தொடங்கியிருக்கின்றனர்.

நோய்தீர வுபாயம்.

அநேக ரோகங்களுக்கு மூத்திர உப்பு விஷமே (யூரிக் ஆஸிட் பாய்ஸன்) காரணம். துர்ப்பலமாயும், ரோகம் முதிர்ந்தும் உள்ள மூத்திரப்பை தான் செய்யவேண்டியபடி செய்யாமல், ரத்தத்திலிருந்து மூத்திரத்தை வடிகட்டாது ஆகிறது. உடம்பு முழுதும் சுகமாயிருக்கிறதற்கு முக்கியமான காரியம் மூத்திர விஷம் ரத்தத்திலிருந்து பிரிவதுதான்.

பலமில்லாமலும், ரோகம் நிறைந்தும் இருக்கிற மூத்திரப்பையின் லக்ஷணங் கேளுங்கள்:—முதுகுநோய், தூக்கம் பிடியாதிருத்தல், ஜலம் கொஞ்சமா யிறங்குவது, மூத்திரம் நிறமாறுதல், மூத்திரத்திலிருந்து புகை கிளம்புவது, எப்போதும் தாகம், ஆயாசம், பலவீனமான இருதயம், தலைநோவு; தைரியமில்லாமை, கண்பார்வையின் மந்தம், தலைச்சுற்று, கீல்களும், சதைகளும் புண்ணாகி அசைக்க முடியாமற் போவது, மறதி, சாதாரண பலவீனம் முதலானவை. இந்த லக்ஷணங்கள் உண்டானபோது, அசட்டை செய்துவிட்டால், கீழே சொல்லும் ரோகங்கள் தப்பாமல் உண்டாகும். மூத்திர ரோகம், திமிர்வாயு, மகோதரம், பகு மூத்திர ரோகம் முதலானவைகளும், ஸ்த்ரீரோகமென்று தப்பாக எண்ணிக்கொள்ளும் ரோகங்களும்.

(டோன்ஸ் பாக்-ஏக் கிட்னி பில்ஸ்) டோன் அவர்களுடைய முதுகுநோய் மூத்திரப்பை ரோகமாத்திரைகள், மூத்திரப்பையிலும், மூத்திர அவயவங்களிலும் புகுந்து, மூத்திர விஷத்தை ரத்தத்திலிருந்து பிரிக்கும். அது நடந்தால், சரீரசுகம் தப்பாமல உண்டாகும். சுகமாய் இருக்கவேண்டுமானல் மூத்திரப்பை ரோக மடையாமல் வைத்துக்கொள்ளவேண்டும். மூத்திரப்பையை ரோகமடையாமல் காத்துக்கொள்வதற்கு ஏற்ற மருந்து(டோன்ஸ் பாக்-ஏக் கிட்னி பில்ஸ்) டோன் அவர்களுடைய முதுகு நோய் மூத்திரப்பை ரோகமாத்திரைகளே.

DOAN'S BACKACHE KIDNEY PILLS
Doan's Backache Kidney Pills Co.
FOR KIDNEY COMPLAINTS

ஒரு புட்டி விலை, ரூபா.	2 0 0
6 புட்டியின் விலை, ரூபா.	10 8 0

இவை, சீமை மருந்து வியாபாரிகள் எல்லாரிடத்திலும், சென்னையில் ஏஜெண்ட் ஆன டப்பிளியு. எச். ஜுல்ஸர் துரையவரிடத்திலும் கிடைக்கும்.

Cham

இந்தியா.

குரங்குகளின் உபத்திரவம்—சந்திரநாகூரில் குரங்குகள் சனங்களை உபத்திரவஞ் செய்கிறதாம். ஒட்டிப்படர்ந்து காய்த்தபூசணிக்காயை வைக்கோலால்மூடச்சென்ற ஓரிஸதிரியை ஓர் குரங்கு 20 அடி உயரத்தினின்று கீழேதள்ள அவள்மாண்டாள். அதேமாதிரி வேறொருஇடத்தில்நடந்தும் ஸ்திரீகாயப்பட்டும் குணமடைந்தவளாகிறாளாம்,

கூட்டக்கொள்ளை—பாரிட்ப்பூரில் மெஸ. பார்வதிபோஸ் என்பவர்வீட்டில் 24 வாலிபர் துப்பாக்கிகளுடனுட்புகுந்து உள்ளிருந்தவர்களைத் தாக்கி இரும்புப்பெட்டிகளை உடைத்து 25 ஆயிரம் ரூபா பணமும் 800 ரூபா நோட்டுக்களாகவும் எடுத்துப் போயினர். கிராமத்தார் திருடரைஎதிர்த்தும் துப்பாக்கிப்பிரயோகத்தால் தடைப்பட்டனர் இதுவரையில் திருடர்பிடிபடவில்லை.

மண்ணெண்ணய்விபத்து—சாராச்சியில் ஒரு கொள்ளியினுல் மண்ணெண்ணய்த் தகரத்திலுள்ள ஈயப்பற்றை உருக்கிஎடுக்க எத்தனித்ததினுல் தீப்பற்றி 4 ஸதிரிகளும் இரண்டுபிள்ளைகளும் தீவாய்ப்பட்டிறந்தனர்.

இரும்பு—மைசூர்ச்சமஸதானத்தில் இரும்பெடுக்கும்கனிகள் அனேகம்இருக்கின்றன. அவைகளைப் பம்பாயிலுள்ள டாடாக் கம்பனியாருக்குக் குத்தகையாய்க் கொடுக்கத் தீர்மானித்திருக்கிறார்கள்.

யுத்த தந்தி.

(இச்சங்கதிகள் “சிலோன்னைறம்” விலும் மற்றிரூஸ் “சுதேசமித்திர”னிலுமிருந்து சுருக்கிஎடுக்கப்பட்டது.)

பிரான்சுபெல்சியசெர்மனியயுத்தம்.

வேர்டனில்பிரான்சியசேனை வலுவாய்த்தாக்கிச் செயம்பெற்றது. இது செர்மனியனுப்பிய சமாதானபிரேரணைக்குப்பதிலானது. செர்மனியர் முன்செயம்பெற்றஇடம்வரையில் திருப்பியடிக்கப்பட்டனர்.

மியுஸநதியின்வலப்பக்கத்தில் கடுஞ்சண்டை நடந்தபின் பிரேட்டிபாம் என்றஇடத்திலிருந்து சத்துருக்களை வெளிப்படுத்தி அவ்விடமுழுவதையும் பிரான்சர்கைப்பற்றினர்.

18உ இரவு அர்மண்டயசுக்குத்தெற்கில் பிரித்தானியபடைகள் சத்துருஅரணுட்புகுந்து அனேகரைக்கொன்றனர்.

சோம்நதிக்கரையில் நடைபெறுஞ்சண்டையில் செர்மனியருக்கு 690,000 பேர் நஷ்டமாயிருக்கவேண்டுமென்று மதிப்பிடப்படுகிறது.

சோம்நதிக்கரைப் போர்முகத்தில் 4 சத்துரு விமானங்கள் கீழிறங்கும்படிசெய்யப்பட்டன. ஓர் பிரான்சுவிமானத்தைத்தொடர்ந்தசத்துருவிமானமும் பிரான்சுவிமானமும் அடிபட்டு இரண்டும் கீழேஇறங்கின அருகில் 50 சத்துருக்களைப் பிரித்தானியர் சிறைப்படுத்தினர்,

லென்சுக்குவடக்கே சத்துரு அரண்களையும் சேனைகளையும் மறைத்துநிற்கும் ஸதலங்களையும் பிரித்தானிய சேனைகள் தகர்த்து அதிக சேதம் விளைத்தன நமக்குச்சேதமில்லை. பல ஆகாயச் சண்டைகள் நடந்து ஒரு சத்துருவிமானம் நாசமாக்கப்பட்டு 5 விமானங்கள் சேதப்படுத்தப்பட்டன நமதுவிமானங்களில்மூன்றைக் காணவில்லையென்று பிரித்தானியஅறிக்கை கூறுகிறது.

சோம்நதிக்குத்தெற்கில் சத்துரு பீரங்கிப்படையொன்றுநாசமாக்கப்பட்டது. அவரேக்குக்குத்தெற்கில் பலரைச் சிறைபிடித்தோமென்று பிரான்சியஅறிக்கைகூறுகிறது.

டெலின்சன் என்றஇடத்தில் பிரித்தானியகடல்விமானங்கள் ஒருடன்நிறையுள்ள குண்டுகளை எறிந்தன. வேறிடங்களில் றெயில்ஸ்டேசன்களையும் தொழிற்சாலைகளையும் நிலக்கரிச் சுரங்களையும் இரும்புத்தொழிற்சாலையையும் வெடிக்குண்டாற்றாக்கின.

1916 ம் ஆ வேர்டனுக்குமுன்னும் சோம்நதிக்கரையிலும் பிரான்சர் 78500 பேரைச்சிறைபிடித்தனர்.

பிரான்சியபோர்முனை தற்போது முன்பின்100 மைல்தூரமுள்ளதாயிருக்கிறது 20 லட்சம் பிரித்தானிய சேனைகளதிலிருக்கின்றன.

போமாண்ட்காமல் என்னுமிடத்திற்குவடக்கில் இரண்டுஇடங்களைப் பிரித்தானியர் கைப்பற்றினர். அருசுகருத்தென்மேற்கில் சத்துருக்களின் இரண்டு அரண்களைக்கடந்து மூன்றாம்அரண்வரையில்முனசென்று சத்துருத் தற்காப்புஅமைப்புக்களை வெகுவாய் நாசப்படுத்தினர். இம்மாசம்முதலிலிருந்து 240 பேர் கைதிகளாய்ப்பிடிக்கப்பட்டார்கள்.

ருமேனியா

ருசியர் கிரோஸமசோவில் 7 இடங்களில் தீவிபத்துண்டாக்கினர்.

வெலார்டிஞவில் சத்துருக்கள் நம்மைத்தாக்க முயன்றும் நாம் எட்டியாற்றுக்கப் பின்னிடச்செய்தோம். ருமேனிய போர்முகத்தில் மேடான ஸதலத்தைக் கைப்பற்றினோம். பூசுவில்பினனடையும் நம்சேனைகளைத்தாக்க முயற்சித்த சத்துரு குதிரைப்படைகளை நமது குதிரைப்படை இருமுறைதாக்கச் சென்றும் அவை காலாட்படைக்குப் பின்னுல் மறைந்தன, கார்ப்பேதியனில் உன்னதமான இடங்களையும் 100 பேரையும் பிடித்தோமென்று ருசியசெய்தி கூறுகிறது.

கடந்த இரண்டுமாசங்களில் ருமேனியாவில்சத்துருக்களுக்கு சேர்ந்தநட்டம் 250. 000 பேராம்

ரிம்னிகசார்ட்டுக்கு வடமேற்கிலும் மேற்கிலும் தென்மேற்கிலும் நம முன்னணிப்படைகளைச் சத்துருக்கள பின்னிடச்செய்தனர். நமதுபடைகள் டொப்ருட்சாவில் வடபக்கத்தில் பின்செல்லுகின்றனவென்று ருசியஅறிக்கை கூறுகிறது.

கோவல்பகுதியில் செர்மனியர் வலுவில்தாக்கியும் வெகுசேதத்துடன் திருப்பியடிக்கப்பட்டனர். ருமேனிய போர்முனைமுழுதும் செர்மனியர்வலுவில்தாக்கி ரிம்னிக் என்னுமிடத்திற்கப்பால் ருசியர் பின்னடைந்துசெல்லும்படி செய்தனர். மற்றஇடங்களில் செர்மனியர் திருப்பியடிக்கப்பட்டனர். ருசிய காவற்படையார் நராசுகா நதியைக்கடந்து சத்துருக்காவற் சேனைகளை விரட்டி அங்கிருந்து அரண்களுக் குபயோகமான பொருட்களைக் கொண்டுவந்தனர்.

மால்டேவியாவில் சத்துருக்கள் நமது படைகளிற் சிலவற்றைப் பின்னிடச்செய்து உன்னதமான பல இடங்களைக் கைப்பற்றினர். நீஸ்றர் நதியைக்கடக்கச் செர்மனியர் செய்தமுயற்சிப்பிரயோசன மற்றுப் போகும்படி செய்யப்பட்டது. டான்யூப் நதிக்குத்தெற்கில் சத்துருக்கள் திருப்பி யடிக்கப்பட்டனர். அதில்பிரித்தானிய ஆயுதமேற்றிய மோட்டர்வண்டிகள் மிகு உதவிசெய்தன. சத்துரு சேனைகள் ஓட ஆரம்பித்தன. ஆயிடஸ் பள்ளத்தாக்கில் சத்துருக்கள் உன்னதமான சில இடங்களைப் பிடித்துக் கொண்டார்கள். சான்மசோவுக்குத் தெற்கிலும் கிழக்கிலும் கோர்சாவுக்கு வடக்கிலும் நமது படை பலமாய்ச் சேகரிக்கப் படுகின்றன. ரிம்னிசாவுக்கு வடக்கில் சத்துருக்கள் பிடிவாதத்துடன் தாக்கி ரிம்னிக் றெயிற் பாதையிலுள்ள பார்டாசியைப் பிடித்துக் கொண்டார்கள். செயஸ்டசி என்ற இடத்தில் நமதுபடையைப் பின்னிடச் செய்தார்கள். டான்யூப் நதிக்குத்தெற்கே சத்துருக்கள் தாக்கியதை நமது படைகள் திருப்பியடித்து விட்டனவென்று ருசிய அறிக்கை கூறுகிறது.

ரிம்னிக்ஸாராவைப் பிடித்ததைக் குறித்துச் செர்மனியர் வெகு பெருமை பாராட்டினுலும் அதைப்பிடிப்பதில் செர்மனியருக்கு மிதமிஞ்சின சேதமுண்டாயிற்றென்று தெரிவிக்கப் படுகிறது. ருமேனிய எண்ணெய்க் கிணறுகளில் பூமிக்கு மேலிருந்த சகல சாமான்களும் அழிக்கப்பட்டனவென்றும் அதனுல் 80 லட்சம் பவுன் நட்டமாமென்றும், தரைக்குக் கீழ் கிணறுகளிலிருந்து எண்ணெய் வெளிப்படாமற் செய்த ஏற்பாடுகளும் அற்பமானதல்லவென்றும் சகல யந்திரங்களும் சின்னுபின்னமாய்ப் போயிற்றென்றும், எண்ணெய்த்தொட்டிகளை ருமேனியர் தீக்கிரையாக்கி விட்டார்களென்றும் செர்மனிய பத்திரமொன்று கூறுகிறது.

மால்டேவிய போர் முகத்தில் ருசிய ருமேனிய சேனைகளை எதிர்த்துத் தாக்குவதுடன் பக்கவாட்டிலும் வளைந்து தாக்கச் செர்மனியர் செய்த பிரயத்தனம் இன்னும் பலமடையவில்லை. கடந்த மாதம் ருசியர் ட்ரோடஸ் கணவாயில் கைப்பற்றியஇடங்களுக்குப்பின் புறத்திலுஞ் சண்டைநடக்கிறது. ருசியர் உசுர்பள்ளத்தாக்கிலும் ருமேனியர் ஆய்டன்பள்ளத்தாக்கிலுமிருப்பதால் இவ்விருபடைகளும் சந்திக்கக்கூடியஇடத்தில் தாக்கவேசெர்மனியர் பிரயத்தனிக்கிறார்களென்று குறிப்பிடப்படுகிறது. சென்றஞாயிற்றுக்கிழமை ருமேனியரிடமிருந்து பிடித்தஇடங்களை மறுநாள் ருமேனியர் பிடித்துக்கொண்டார்கள்.

ஆய்டஸ பள்ளத்தாக்கில் கடும்போர்நடக்கிறது. சத்துருக்கள் உதவிபெற்று பலமுறை நம்மைத்தாக்கிஉன்னதமான இடங்களைப் பிடித்துக்கொண்டார்கள் மால்டோவியா எல்லையில் சத்துருக்கள் உக்கிரமாய்த்தாக்குகிறார்கள். சேவவில் சத்துருக்கள் வலுவில்தாக்கியது பயன்படவில்லை. சேஸியில் ருமேனியர் செயம்பெற்று பல செர்மனியரைச் சிறைபிடித்தனர். அப்பட்டு பலமுறைகை மாறி ஈற்றில் செர்மனியர் வசமாயிற்று. போர்டாஸியிலிருந்து சத்துருக்களை அப்புறப்படுத்தினேமென்று ருசியசெய்தி கூறுகிறது.

மொங்டேவியன் போர்முனையில் சத்துருக்கள் ருசிய ருமேனியரைப் பின்னிடச்செய்தார்கள். ரிம்னியாஸ்ராட்டிலிருந்து வடக்கே றெயிற்பாதை நெடுக நெருங்கிவந்து போர் டெஸ்டியையும் பாலேஸ்டியையும் பிடித்துக்கொண்டார்கள். புஜேன் பிரெஸ்லா றெயிற்பாதை வழியாய் முன்செல்லுகிறார்கள். டொப்ருட்சாவிலும் சத்துருக்கள் முன்னேறுகிறார்கள்.

புருசாப்புக்கும் ஆர்னிசுக்கும் மத்தியிலுள்ளறெயிற்பாதைக்கு வடமேற்கில் ருமேனியரைச் சத்துருக்கள் பின்னிடச்செய்தார்கள், டொப்ருட்சாவில் பிரேஸலாவுக்குத் தென்கிழக்கில் சத்துருக்கள்தாக்கி உன்னதமான பலத்த ஸதலங்களைக் கைப்பற்றினர்.

புதுவருஷப்பிறப்புமுன்னிட்டுச் செர்மனிய சக்கிரவர்த்தி தமதசைனுக்கு அனுப்பியதந்தியில் ருமேனியாவைக் கத்திசெய்துவருவதாயும் புதுவருடத்தில் பலவெற்றிகிடைக்குமென்று நம்புவதாயும் தெரிவித்தாராம்.

மால்டேவியாவின் எல்லையில் சத்துருக்கள வலுவிற்றுக்காவண்ணம் கிலைக்கப்பட்டார்கள். ஆய்டஸபள்ளத்தாக்கில் திருப்பியடிக்கப்பட்டார்கள், காசினுக்கரையில் ருமேனியர் திருப்பி எதிர்த்துச் சண்டைசெய்து நிறுத்திக்கொண்டார்கள். மால்டேவியாவில் ருசியர் சத்துருக்களை எதிர்த்துவிட்டு கடைசியாக காத்கரைவரையில் பின்னடைந்துவருகிறார்கள். ஜெனரல் பால்கன்ஹின் தலைமையின்கீழ் செர்மனியசேனைகள் ஆசானேவுண்டினே என்ற இடத்திலுள்ள பலமுள்ள முன்னேறிவந்திருகின்றன. தற்போது இருபுறச்சேனைகளும் வந்திருக்கும்போர்முனையில் 50 மைல் தூரத்துக்கு வரிசையாக்க கோட்டைகள் இருப்பதனால் அங்கு பலத்தயுத்தம் நடைபெறுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தயுத்தத்தின் செயபசெயத்தால் பெருந்தமா அதலைனேற்படக்கூடும்.

போடேகலோவுக்கு தெற்குப்பக்கத்திலுள்ள உன்னதஸ்தலங்களை ருசியர்பிடித்து 600 பேர்களையும் 16 யந்திரபீரங்கிகளையும் 6 பீரங்கிகளையும்பிடித்து சத்துருக்களைப்பின்னடை முன்சென்றார்கள். டாட்ரோச்பள்ளத்தாக்கில் சத்துருக்கள் 6 தரம் மும்முரமாய்த்தாக்கி திருப்பியடிக்கப்பட்டனர். டொப்ருட்சாவில் பல்கேரிய படையொன்றை ருசியபடை நிகரொன்றுதாக்கி நாசமாக்கிற்று.

யாட்சினில் சத்துருக்கள் மேதுபடைகளைப் பின்னிடச்செய்தனர். அங்குள்ள நமது சேனைகள் பிரேய்லாநகரைநோக்கிப் பின் செல்லுகின்றன ஆயுதங்களமைக்கப்பட்ட பிரித்தானிய மோட்டார்வண்டிகள் பிரேய்லாவுக்கு வீதிக்குவிலை விலுள்ள தெருக்களில் சத்துருக்களுக்குத் தக்க ண்டனை விதித்தருளின.

யாசின்கரம் சத்துரு வசமாய் விட்டமையால் ருசியர் அங்கு தற்காப்புச் சண்டைசெய்த இயலாமற்போயிற்று. ஆதலால் ருசியர் டொப்ருட்சாவின் மற்றஇடங்களையும் விட்டுப்போய் விட்டார்கள். ஆயினும் இதுவரையும் அங்கு சேனையோடுவத்திருந்தது பிரேய்லாவை சத்துருக்கள் சேதிர

ம் கைப்பற்றுவண்ணம் நடந்துவந்தது. ஆதலால் அங்குள்ள உணவுப்பொருட்களையும் மற்றையசாமான்களையும் கொண்டுபோயிருப்பார்களென்று நம்பப்படுகிறது.

ருமேனியர் பூசானிப் பக்கமாய்ப் பின்செல்லுகிறார்கள். சத்துருக்கள் அசற்கருகில்வந்துகொண்டிருக்கிறார்கள். சுகிசா நதிக்கரையிலிருந்த ருமேனியரைச் சத்துருக்கள் பின்தள்ளிவிட்டனர்.

ரிம்னிசனி, குல்யாங்கா ஆகிய இடங்களிலும் சத்துருக்கள் வலுவில்தாக்கி ருமேனியரை 4 மைல்தூரம் பின்னிடச்செய்தனர்.

கிரேக்கு.

கிரேக்கின் வடபாகத்துள்ள சேனைகளை அவ்விடத்தைவிட்டகலும்படி அரசாட்சிகற்பித்ததாம். கிரேக்கில் ஐக்கியராசியப்படைகள் கொல்லப்பட்டதற்கபராதமாய் ஐக்கியராசியக் கொடிகளைக் கிரேக்கசேனைகள் ஒருமுறை வணங்கிமரியாதைசெய்யவேண்டுமென்றும் தபால்தந்திப்போக்குவரவுகளை ஐக்கியராச்சியங்களின் அதிகாரத்தின்கீழ் விடவேண்டுமென்றும், வெனிசிலாஸ கட்சியாருக்கு நட்டஈடும், சிறைப்படுத்தப் பட்டவர்களுக்குத் தன்விஷ்டமும் கொடுக்கப்படவேண்டுமென்றும், ஐக்கியராச்சியங்கள் கிரேக்கையைக் கேட்டிருக்கிறது. இதற்குடன்படும்வரையில் கடலடைப்பு நிவிர்த்தியாகா.

வெனிசிலாஸ்கட்சியாரில் 3000 பேர் சிறையிலடைக்கப்பட்டிருக்கிறார்களென்றும் 300 பேர் சுடப்பட்டார்களென்றும் தெரிகிறது.

கிரேக்கஉள்நாடுகளில் ஐக்கியராச்சியச்சேனைகளிடம் இருந்த யுத்ததளபாடங்களையும் பீரங்கிகளையும் கிரேக்காசாங்க உத்தியோகஸ்தர் கைப்பற்றினர். அதற்குக்காவலாயிருந்தவர்களை வெளிப்படுத்தினர். சனங்கள் ஐக்கியராச்சிய அதிகாரிகளை அவமதித்துநடத்தினர். வோலோசாங்காணில் கிரேக்கபிரசைகளின் கூட்டமொன்று ஒருபிரித்தானிய கப்பலிலிருந்துவந்த உத்தியோகஸ்தரைவழிமறித்து பிரித்தானியபாதுகாப்பு உத்தியோகஸ்தரின் சாமான்களைக் கடலிலெறிந்து இரண்டு பிரான்சியயுத்தவீரரையும் ஓர் துவிபாஷகரையும் கொலைசெய்துவிட்டனரென்று ஓர்செய்திகூறுகிறது.

கிரேக்கசேனைகள் ருமேனியா என்னுமிடத்திற்கு அனுப்பப்படுகின்றன.

தேசதுரோககுற்றநிமித்தம் மெஸ். வெனிலாசை மறியற்படுத்துமாறு கிரேக்கஅரசாட்சி உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

ஐக்கியகட்சியார் வெனிசிலாஸ கட்சியாரைஆதரிப்பதைப்பற்றியும் பலரைக் கிரேக்கருக்குச்சொந்தமான தீவுகளிற்கொண்டுபோய்ச் சேர்ப்பதைப்பற்றியும் கிரேக்குஆட்சேபித்து ஐக்கியகட்சியாருக்குக்கொடுத்தவாக்குறுதி நிறைவேற்றப்படாதாயும் காட்டிஓரதிக்கையனுப்பியிருக்கிறது.

கடலடைப்புநிவிர்த்தி ஏற்படாமையால் கிரேக்குஅடையும் கட்டங்களைவிபரித்து தற்போதையநிலைமையை ஐக்கியகட்சியார் சீர்திருத்தும்வரையில் கிரேக்கசேனைகளைத் தென்பாகத்துக்கு அனுப்புவது நிறுத்திவைக்கவேண்டுமென்று கிரேக்கை ஓரதிக்கை யனுப்பியதாய்த்தெரிகிறது.

ஐக்கியராச்சியங்கள் கிரேக்கஅரசுக்கு இரண்டாம்முறைஅனுப்பவிருக்கும் இறுதிக்கடிதம்தயாராய்விட்டது. அதிற்சேமப்படையொன்று கூடுவதைத்தடுத்தல் தந்திதபாற்பாதைகளை ஐக்கிய அரசுகள்வசம் ஒப்புவித்தல் சிறைப்படுத்தியிருக்கும்வெனிசிலாஸ்கட்சியாரைவிடுதல் அங்குநடந்தகலகத்தைக்குறித்து கிரேக்க அரசாட்சிப்பிரதிநிதிகளும் ஐக்கிய அரசுகளின் பிரதிநிதிகளுமடங்கிய ஓர்கொம்மிற்றிநியமித்து விசாரணை நடத்தல் ஆகியநிபந்தனைக்குட்படும்படி கேட்டிருக்கிறது.

20உ கிரேக்கஅரசு ஐக்கியஅரசுகளுக் கனுப்பியபதில் ஐக்கியஅரசுகள் கடலடைப்புச் செய்திருப்பதும் கலகக்கட்சியாரின் முயற்சிபலமடையும்படிசெய்திருப்பதும் சமாதானத்திற்குத் தடையாயிருக்கிறதென்றும் சீக்கிரம் நேசப்பான்மையுண்டாக்க வேண்டு மென்பதை யுத்தேசித்துத் தற்போதிருந்நிலைமையை ஐக்கிய அரசுகள் சீர்ப்படுத்தவேண்டுமென்றும் கிரேக்கஅரசு வேண்டிக்கொள்ளுகிறது. கவனியாதிருந்து கிரேக்கில் கலகமேற்படுமானால் அதற்குக்கிரேக்கஅரசு உத்தரவாதியாகாதென்றும் தெரிவித்திருக்கிறது.

ஐக்கியதேசஸ்தானாபதிகள் வெனிசிலாஸ் கட்சியாருக்கு உடந்தையாயிருந்ததால் மறியலிடப்பட்ட அன்னிய நாட்டுப்பிரசைகளை விடுதலைசெய்யும்படி கிரேக்க உள்நாட்டுமந்திரியைக் கேட்டார்கள். சீக்கிரத்திற்பதில் தெரிவிப்பதாக அவர் சொன்னார்.

ஏதேனில் இத்தாலியருக்குநேர்ந்த நட்டத்தை கொடுக்கும்படி இத்தாலி கிரேக்கைக்கேட்டிருக்கிறது. ருசியா பிரான்சு இங்கிலந்து மூன்றுஞ்சேர்ந்து கிரேக்குக்கு ஓர்அதிக்கையனுப்பியிருக்கிறது. அதில் கிரேக்கில் சனஅமைதிக்குத்தேவையான சேனைகளைவைத்துக்கொண்டு மிகுதியை ஐக்கியராச்சியம் குறிப்பிடும்இடத்துக்கு அனுப்பவேண்டுமென்றும் சேமப்படையார் ஒன்றுகூடாமல் அரசாட்சியார் செய்யவேண்டுமென்றும சிவியன்களிடமிருக்கும் ஆயுதங்களை வாங்கிவிடவேண்டுமென்றும் அங்குநடந்த கலகத்திற்காக மன்னிப்புக்கேட்டு ஐக்கிய அரசகொடியை வணங்கவேண்டுமென்றும், கைதிசெய்த வெனிசிலாஸ் கட்சியாரை விட்டுவிட வேண்டுமென்றும், அதில் கேட்கப் பட்டிருக்கிறது. இதற்கு இணங்காவிடில் கடலடைப்பு நிறுத்தப்படாதென்றும், சிக்கிரம் ஐக்கியசேனைகள் இடியாவில் இறக்கப்பட்டுலோரா றெயில்பாதை மூலமாய்ச் சலோனிக்காவுக்குக் கொண்டுபோகப்படுவார்களென்றும், அறிவிக்கப்பட்டிருக்கிறது.

சனங்களின்நோக்கம் ஒருவிதமாயும் அரசின் நோக்கம் வேறுவிதமாயுமிருப்பதால ஐக்கிய அரசுகளின்கேள்விக்குப் பதிலனுப்பக்கூடாமல் கிரேக்கஅரசர் கஷ்டப்படுகிறாராம்.

கடலடைப்பால் கிரேக்கு கஷ்டப்படுகிறது. உணவுப்பொருட்கள் தயாரித்துவிற்குமிடத்தில் நாள்தோறும் சண்டைநடக்கிறது. அங்குள்ளபொருள் 15உ வரையில்த்தான் காணும். கிரேக்கசேனைகள் கலகஞ்செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். எந்தஅதிகாரத்துக்கும் உடன்படோமென்கிறார்கள். சேமப்படையினர்க்கு உதவியாயிருந்த இராணுவகட்சியாரும் ஒன்றுஞ் செய்யமுடியவில்லை. சனங்கள் ஆயுதபாணிகளாயிருக்கிறார்கள். 1871ம் ௵ பரிசில் நடந்தகலகம்போல் இங்கும் நடைபெறக்கூடும்.

கிரேக்கரசர் மூன் பிரதானமந்திரியாயிருந்தவர்களையழைத்து யோசித்தார். அவர்கள ஐக்கியராச்சியங்களின் அதிக்கையை ஒப்புக்கொள்ளக்கூடாதென்று தெரிவித்தார்கள். அதனால் அரசரும் அரசாட்சியும் அவ்வதிக்கையில் சில நிபந்தனைகளை மறுத்துவிட்டு அதனால் ஏற்படும் நட்டங்களைச்சகிக்கத் தீர்மானித்தார்கள்.

கடற்சங்கதி.

குதிரைகள்ஏற்றிச்செல்லும் ருஷ்யன்என்ற பிரித்தானியகப்பல் 14உ மத்தியதரைக்கடலில் சப்மரினால் மூழ்கடிக்கப்பட்டது. அதிலிருந்த 13 மாலுமிகளுடன் 17 கோவேறுகழுதைகளும்கொல்லப்பட்டன.

600 டன் நிறையுள்ளதும் சேனைகளை ஏற்றிச்சென்றுகொண்டிருந்ததுமான மாகலன்என்ற பிரான்சியசப்பல் டொர்பிடோக் குண்டுகளால தாக்கப்பட்டு மூழ்கடிக்கப் பட்டதென்று பெர்லின்செய்தி கூறுகிறது. அதிலிருந்த 1000 சேனாவீரரும் காப்பாற்றப்பட்டனராம்.

செயின்மைசாயர் என்னுமிடத்திற்கப்பால் அனேககப்பல்களை மூழ்கடித்த யூ. 46 என்னும்சப்மரீன் டொர்பிடோப் படகுகளால் தாக்கப்பட்டு மூழ்கடிக்கப்பட்டதாய் பாரிஸசங்கதி கூறுகிறது.

சப்ரன்என்ற பிரான்சிய யுத்தக்கப்பலை கார்த்திகை ௴ 26உ லிஸபன் துறைமுகத்துக்கு 50மைல்தூரத்தில டொர்பிடோக்குண்டுகளால்தாக்கி மூழ்கடித்ததாகச் செர்மனிய அதிக்கை கூறுகிறது.

ஏசோஎன்ற ஸபானியகப்பலும், ஜோப்னு என்ற நோர்வேக் கப்பலும், சோசர்கள், வகசன், என்ற தென்மார்க்குகப்பலும் நியேஸட் என்ற சுவீடன்கப்பலும் மூழ்கடிக்கப்பட்டன.

ஸ்கிட்டட்என்ற ருசியகப்பலும் மாடிக்என்ற நோர்வேக்கப்பலும் செர்டா என்றதென்மார்க்குக்கப்பலும் இடோனஸ், பினிம்ஸ்டன், பிளேயர்கால் என்ற பிரித்தானியகப்பல்களும் மூழ்கடிக்கப்பட்டன.

டாகிமாருஎன்ற ஸ்பானியகப்பலும் பிரைமாஎன்ற நோர்வேக்கப்பலும் மூழ்கடிக்கப்பட்டன.

நான்சரன்என்ற அமரிக்ககப்பல் மிதவைக்குண்டுகளால் தாக்குண்டு சேதமடைந்தது.

ஹரோப்டாடிர், டான்ஸ்பர்க் என்ற இரண்டு ஒல்லாந்தகப்பல்களும் அவோன்சால் என்றநோர்வேக்கப்பலும் மூழ்கடிக்கப்பட்டன.

சென்ற 21உ வடகடலில் இருபிரித்தானிய டிஸ்திரோயர்க்கப்பல்கள் ஒன்றோடொன்றுமோதி மூழ்கிப்போயின. அதிலிருந்த 6 உத்தியோகஸ்தரும் 51 பேரும் இறந்துபோயினர்.

ஸ்ஞெ என்ற நோர்வேக்கப்பலும் பிரிக்கா என்ற சுவேதன்கப்பலும் அக்னஸ் என்ற பிரித்தானிய பாய்க்கப்பலும் ஹோகான்என்ற தென்மார்க்ககப்பலும் மூழ்கடிக்கப்பட்டன.

இங்கிலந்துக்குச் செயற்கைஎருக்கொண்டுபோன ஆமோட் என்ற நோர்வேக்கப்பலைச் செர்மனியர்பிடித்து ஹம்பர்க துறைமுகத்துக்குக் கொண்டுபோய்விட்டார்கள்.

ஸகிபட் என்ற ருசியகப்பல் மிதவைக்குண்டினால் தாக்குண்டு மூழ்கிற்று. அதிலிருந்த 200 பிரயாணிகளில் 4 பேர்மாத்திரம் காக்கப்பட்டனர். சுவீடன்தேசக்கப்பலொன்றும் மூழ்கடிக்கப்பட்டதாய்த் தெரிகிறது.

காப்ஸ்வுட் என்ற பிரித்தானியகப்பலும் இதா என்ற நோர்வேக்கப்பலும் மூன்று பிரித்தானிய பாய்க்கப்பல்களும் ஒரு நோர்வேப்பாய்க்கப்பலும் மூழ்கடிக்கப்பட்டன.

சுரோவடர், ஐஸ்லாபி, ஓரான்சே என்ற மூன்று பிரித்தானியகப்பல்களும் மெரிடியோ என்ற ஸ்பானியகப்பலும் மிஸஙிரான்ஸ் என்ற நோர்வேக்கப்பலும் மூழ்கடிக்கப்பட்டன.

கென்வாய்ஸ என்ற பிரான்சிய போர்க்கப்பல் மத்தியதரைக்கடலில் சப்மரீனால் மூழ்கடிக்கப்பட்டன.

1916ம் வருஷத்தில் நோர்வேக்குச் சொந்தமான 272 கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. அவற்றின் மொத்த நிறை 367000 டன். விலைமதிப்பு 2 ஆயிரம் லட்சம் க்ரோனர்.

சென்ற மார்கழி௴ 22உ ரோப்டாடிர் என்ற தென்மார்க்குக்கப்பல் செர்மன் சப்மரீனால் மூழ்கடிக்கப்பட்டது. அதிலிருந்து தப்பிவந்தவர்கள் தம் அவதியைச் சொல்லுகின்றனர். சப்மரீனுக்கும் கப்பலுக்குமிடையில் இருவரகப்பட்டு நசிந்திறந்தனர். கப்பற்றலைவனும் நசிந்துபோனார். தப்பினவர்களைச் சப்மரீன் ஏற்றிக்கொண்டது, இதற்கிடையில் பிரான்சு யுத்தக்கப்பலொன்றுவரச் சப்மரீன் தண்ணீருள்மூழ்கி சிப்ரக்குக்குப்போய்ச்சேர்ந்தது.

ஆபஸலிகார் என்ற பிரித்தானியகப்பலும் டஸ்கார் என்றருசியகப்பலும் பினோரா, எட்டா, இவா என்ற நோர்வேக்கப்பல்களும் டிமிட்ரவிஸ், இங்கில்ஸ என்ற கிரேக்ககப்பல்களும் மூழ்கடிக்கப்பட்டன. கிரேக்குக்குச்சொந்தமான வேறுமூன்று பாய்க்கப்பல்களும் மூழ்கடிக்கப்பட்டன.

அலோக்கிரா என்ற 3000 டன் நிறையுள்ள கப்பலொன்று கார்க் என்னுமிடத்துக்கருகில் பாறையில்மோதி உடைந்துபோயிற்று. அனேகர் இறந்தனர்: 18 பேர்மாத்திரம பிழைத்துக் குயீனஸடவுன் என்னுமிடதில் கரைசேர்க்கப்பட்டனர். 28 பேரைக் காணவில்லை.

எகங்காக்வா என்ற பிரான்சுக்கப்பலும் கூஸ்பிரிட்ஸ் என்ற சுவேதன்கப்பலும் கோஸிபிரான்ச் என்ற பிரித்தானியகப்பலும் எரிகாஎன்ற நோர்வேக்கப்பலும் மூழ்கடிக்கப்பட்டன.

காங்காறுமருஎன்ற யப்பானியகப்பல்புயலிலகப்பட்டுக் கரைதட்டி உடைந்துபோயிற்று. 50 பேர் மீட்கப்பட்டனர். 350 பேர் மாண்டனர்.

கெஸ்டேரியஸ என்ற பிரித்தானியகப்பல் மூடுபனியிலகப்பட்டுக் கரைதட்டி உடைந்துபோயிற்று. மாலுமிகள் காக்கப்பட்டனர்.

பேக்ரெயிக்என்ற பிரித்தானியகப்பலும் பிரியாணிக், எல்லிக் என்ற நோர்வேக் கப்பல்களும் மூழ்கடிக்கப்பட்டன.

பிரித்தானியசேனைகளுக்குச் சாமான் ஏற்றிச்செல்லும் இவர்னியா என்றகப்பல் சென்ற 1உ மத்தியதரைக்கடலில் கடல் கொந்தளிப்பான சமயத்தில் சப்மரீனால் தாக்கப்பட்டு மூழ்கடிக்கப்பட்டது. அதில் 4 இராணுவ ஆபீசரும் 120 பேரும் 33 மாலுமிகளுஞ்சேதமாயினர். இக்கப்பல் 14278 டன் நிறையுள்ளது. குனர்டு கம்பனியாருக்குடையது.

வேரைவிட் என்றபிரான்சயுத்தக்கப்பலை டொர்பிடோக்குண்டுகளால்தாக்கி அமிழ்த்திவிட்டதாகச் செர்மனியர்சொல்வது பொய்யென்று பிரான்சிய கடற்படைப்பகுதியார் தெரிவிக்கின்றனர்.

லயன் என்ற பிரான்சுக்கப்பலும் ஒட்டர் என்ற நோர்வேக்கப்பலும் சான்லீன்ட் ரோஎன்ற ஸபெயின் தேசக்கப்பலும் கொலாண்ட்ரோஸ, அரிஸடோவிஸ்யோரோ என்ற கிரேக்ககப்பலும் மூழ்கடிக்கப்பட்டன. மூழ்கடிக்கப்பட்ட இவர்னியாவில் 85 பேர் சேதம்.

சமாதான அறிக்கை.

செர்மனி சமாதானத்தைக்குறித்து அறிவித்த அதிக்கையை அமரிக்கபிரசாதிபதியான வில்சன் தமது எண்ணத்தை அறிவிக்காமலே ஐக்கியராச்சியங்களுக்கு அனுப்பிவிட்டார்.

சமாதானத்தைமுன்னிட்டு ஆரம்ப நிபந்தனைகளைப்பற்றி இருபகுதியாரும் தமதபிப்பிராயங்களைத்தெரிவிக்க அனுகூலமானதருணம் கிடைத்திருக்கிறதென்று அமரிக்க பிரசாதிபதிசொன்னார். தாம் பிரேரணைசெய்பவராவது மத்தியஸ்தம்செய்யவராவது முன்வரவில்லையென்றும் இருக்கும் நிலைமையைக் குறிப்பிடுவதாயும் சொன்னார். அமரிக்க ஐக்கியநாட்டின் உள்நாட்டு மந்திரியார் மத்தியஸ்தநாடுகளின் நிலைமை வரவர நெருக்கப்படுவதால் தாமும்சண்டையிற்கலக்கநேரிடும்போலிருக்கிறதென்றார். பின்பு அவர் பிரசாதிபதியுடன் கலந்துபேசியபின் நடுவுநிலைமையைவகிப்பதில் எவ்விதமாறுபாடும் ஏற்படவில்லையென்றார்.

ஆஸ்திரிய பல்கேரிய துருக்கிய அரசுகள் தாம் தனித்தனி சமாதானஞ்செய்யவிரும்புவதே செர்மனி சமாதானத்தை விரும்பியகாரணமென்றுபாப்பரசர் தெரிவிக்கிறாராம்.

யுத்தத்திற்குக் காரணம் செர்மனிஎன்பதை உணராமல் பிரசாதிபதி சமாதானஅதிக்கையைஅனுப்பியதைக்குறித்து இங்கிலந்தப்பத்திரிகைகள் அதிசயிக்கின்றன. செர்மனி எப்போதாவதுஎளியதேசங்களை மதித்து நடந்ததுண்டாஎன்று கேட்கின்றன.

சீக்கிரம் சமாதானம் ஏற்படாவிடில் சப்மரீனைக்கொண்டு மிதமிஞ்சிய சேதமுண்டாக்க நேரிடுமென்று நடுவுநிலைமைத் தேசங்களுக்குச் செர்மனி ஓரதிக்கை அனுப்பியிருக்கிறதாம்.

பிரசாதிபதி வில்சன்அனுப்பிய அதிக்கைபோலவே சுவிற்சலாந்தனுப்பியஅதிக்கையும் திருத்தியற்றதெனப் பிரான்சியபத்திரங்கள்கூறுகின்றன

சமாதானவிஷயமாயச் செர்மனிசெய்த ஏற்பாடுகள் நடுவுநிலைமைத்தேசங்களிடத்தில் தப்பெண்ணத்தையுண்டாக்கவும் எப்படியாவது நேசராச்சியங்களைச் சமாதானத்திற்கு அழைத்துக்கொள்வதற்குமானவையென்று கருதப்படுகின்றன. இருகட்சியாரும் தங்கள் நிபந்தனைகளை வெளியிடவேண்டுமென்று பிரசாதிபதிகேட்டிருக்க செர்மனி வேண்டுமென்றே மறுத்துவருகிறது. ஈற்றில் செர்மனி பிரசாதிபதிக்கு அனுப்பியபதில் பிரசாதிபதியிடம்போய்ச் சேருமுதலே செர்மன்பத்திரிகையில் வெளிப்பட்டு அது பிரசாதிபதிவையிற் போய்விட்டது. இது கௌரவத்திற்கு விரோதமானசெய்கை.

செர்மனி அனுப்பிய சமாதான அதிக்கைக்குஐக்கியஅரசுகள் ஒன்றுசேர்ந்துகொடுத்தபதில் 30உ பாரிஸநகரிலுள்ள அமரிக்க ஸதானாபதியிடம்கொடுக்கப்பட்டது. அதில் செர்மனியின அறிவிப்புமாய்மாலமானதென்றும் யுத்தத்திற்கு ஐக்கியராசாங்கனே காரணமென்று செர்மனி கூறியதையும்செர்மனி செயம்பெற்றிருப்பதையும் ஆட்சேபித்தும் சமாதான நிபந்தனையைக் குறிப்பிடாமல் அதிக்கைசெய்தது சமாதானத்தை நாடும் அறிகுறியல்லவென்றும் அது தந்திரமென்றும் சர்வதேசங்களும் ராணுவபலத்தைச் சமமாய்க்குறைக்கவேண்டுமென்று முன் ஹேக் சபையிற்கேட்டபோது அதை ஆட்சேபித்தது செர்மனிதானென்றும் பின்பு சண்டை ஆரம்பிக்குமுன் ஆஸதிரியாவுக்கும்சேர்வியாவுக்கும் நேரிட்டபிணக்கைக் கேக்நகரில் மத்தியஸதசபைகூடித் தீர்ப்பதற்குச் செர்மனிஉடன்படாமல சண்டைதொடங்கியதென்றும் பெல்சியத்தின் நடுவுநிலைமைக்கு உத்தரவாதஞ்செய்த தேசங்களில் செர்மனியும் ஒன்றாயிருந்தும் பெல்சியத்தில் ஆக்கிரமித்து உடன்படிக்கைப்பத்திரங்களைத் துண்டுக்கடதாசியென்றும அவசரத்துக்குச் சட்டமில்லையென்றும், மறுத்துவிட்டதென்றும், தற்போதையின்நிலைமை மாறக்கூடுமென்றும், இந்தநிலைமையில் சமாதானஞ்செய்வது அக்கிரமிகளுக்கு நன்மையாமென்றும், ஐக்கியஅரசுகளுள் மித்திரபேதமுண்டாக்கவும், சண்டையில் களைத்த செர்மன் பிரசைகளுக்கும் சேனைகளுக்கும் ஊக்கமுண்டாகவும் செர்மனி சமாதானப்பாசாங்கு செய்திருக்கிறதென்றும், நடுவுநிலைமைத்தேசங்களைப் பயமுறுத்தவும் சப்மரின்களால் அக்கிரமங்களைச்செய்யவும் சனங்களைப் பலவந்தமாய் வெளியேற்றவும் கட்டாயப்படுத்தி வேலைசெய்விக்கவும் அது நியாயமென்று காட்டற்காகவுமே இப்பேச்சைக் கிளப்பிவிட்டிருக்கிறதென்றும, செர்மனி இதுவரையில் செய்தநட்டங்களுக்கு ஈடும், சுவாதீனமான தேசங்கள் சுவாதீனத்துடன் இருக்கும்முறைமையை அனுட்டிக்கும்தன்மையும் ஏற்படுகிறவரையில் சமாதானமாவது முடியாதகாரியமென்றும் உலகத்திற்கு எக்காலமும் பயத்தை உண்டுபண்ணிக்கொண்டிருக்கும் செர்மனியின்பலம்முடிவடைந்து விடக்கூடியதீர்மானம் ஏற்படும்போதுதான் சமாதானமும் ஏற்படுமென்றும் கூறப்பட்டிருக்கிறது

தென்மார்க், சுவேதன், நோர்வே ஆகியதேசங்கள் அமரிக்க பிரசாதிபதியின் அதிக்கையைத் தாம் பலமாய் ஏற்றுக்கொள்வதாகத் தனித் தனிச் சண்டையிற்சேர்ந்த சகலதேசங்களுக்கும் அறிக்கைசெய்திருக்கின்றன, பலவழிகளிலும் கஷ்டநஷ்டங்களை விளைவிக்கும் இந்தயுத்தம் முடிவடைகிறதற்கான ஏற்பாட்டில் தாம் கலந்து வேலைசெய்வது கடமையென்று எண்ணுவதாய் அத்தேசங்கள் அறிவிக்கின்றன.

சமாதான காங்கிரஸ் நடைபெறும்போது அமரிக்க பிரதிநிதிகளும் தமதபிப்பிராயத்தைக்கொடுக்கும் உரிமைபெறவேண்டுமென்றும் ஏனெனில் சமாதான தீர்மானங்கள் அமரிக்காவின் லாப நட்டங்களையும் பாதிக்கக்கூடியவையென்றும் பல அமரிக்கர் எண்ணுகிறார்களாம்.

செர்மனிக்கும் ஆஸ்திரியாவுக்கும் மனஸ்தாபம் அதிகரித்துவருகிறதென்றும் ஆஸ்திரியா செர்மனியைப்பிரித்து தனியே ஐக்கியஅரசுகளுடன் சமாதானஞ் சசெய்ய வேண்டுமென்று ஆஸ்திரிய சனங்கள் விரும்புவதாயுஞ் செய்திவருகிறது.

தைமாசத்தில் கேக்நகரில் மத்தியஸதநாடுகளின் பிரதிநிதிகள் ஒன்றுகூடிச் சமாதானவிஷயமாய் ஆலோசனைசெய்யுமாறு ஓர் சபை ஏற்படுத்தும்படி வாஷிங்டனிலுள்ள செர்மன் பிரதிநிதிகள் அமரிக்க பிரசாதிபதியைத் தூண்டுகிறார்கள்.

ஸ்பானியதேசம் தற்போது சமாதான அதிக்கைசெய்யக்கூடிய தருணமல்லவென்று பிரசாதிபதி வில்சனுடைய அதிக்கையை அங்கீகரிக்க மறுத்துவிட்டது.

நமது சமாதான அதிக்கையை சத்துருக்கள் அங்கீகரியாவிட்டால் தாமாகவே சமாதானத்தை நாடும்படி அவர்களைக் கட்டாயப்படுத்துவோமென்று பவேரியஅரசன் தனது சேனைகளுக்குத் தெரிவித்திருக்கிறார். சண்டை ஆரம்பிக்குமுன் இருந்தபடி அவரவர்தேசம் அவரவருக்குக் கொடுக்கப்படவும் பெல்சியத்துக்கு நட்டஈடு கொடுக்கவும் செர்மனி சம்மதிக்குமென அமரிக்க பிரசாதிபதி அறிவாரென்று ஓர் அமரிக்கபத்திராதிபர் தெரிவிக்கிறார்.

அமரிக்க பார்லிமெந்தில் பிரசாதிபதி வில்சன் அனுப்பிய அதிக்கையை ஆதரித்து ஒரு தீர்மானஞ்செய்யப் பிரேரணைசெய்யப்பட, அதனால் விவாதமுண்டாயின. மெஸ், லாட்ஜ என்றபிரதிநிதி பிரசாதிபதியின்செய்கை அமரிக்கா நடுவுநிலைமைவகிப்பதைவிட்டுக் கட்சிவாதஞ்செய்ய முனைவந்துவிட்டதென்று வாதித்தார். அதனால் சபை தள்ளிவைக்கப்பட்டது.

செர்மனி தனது நிபந்தனைகளைச் சுருக்கமாக அமரிக்காவுக்குத் தெரிவித்திருக்கிறதென்றும் என்றாலும் அதை வெளியிடாதிருக்கிறார்களென்றுங் கருதப்படுகிறது:

செர்மனி பொருளாதாரநிலைமையில் நாளுக்குநாள் பலவீனமடைகிறது. உருளைக்கிழங்கு 1915 ௵ 510 லட்சம் டன் விளைவாயிருக்க இவ்வருடம் 200 லட்சமே உற்பத்தியாயிருக்கின்றன.

செர்மனியின் சமாதான பிரேரணையை ஆதரிக்கும்படி அமரிக்கா ஸபானியாவைக்கேட்டும் மறுத்தமையால் அதே சமாதானம்பேச யோக்கியதையுள்ளதென்று அமரிக்காவிலுள்ள ஐக்கியகட்சிசார்பினர் கூறுகிறார்கள்.

செர்மனி தனது சமாதான நிபந்தனையைப் பிரசாதிபதிக்கனுப்பியிருக்கிறதாம்.

அமரிக்கபார்லிமெந்தில் மூன்றுநாள் விவாதம்நடந்தபின் பிரசாதிபதியின் சமாதான அதிக்கையைத்தழுவிக் கொண்டுவரப்பட்டதீர்மானந்தள்ளப்பட்டது, என்றாலும் சமாதானநிபந்தனைகளைத் தெரிவிக்கும்படி சண்டையிற்சேர்ந்த தேசங்களுக்குப் பிரசாதிபதி வேண்டுதல் தகும் எனத்தீர்மானஞ்செய்யப்பட்டது.

செர்மனியை நாசமாக்கச் சத்துருக்கள் எண்ணுவதினால் இனிமேல்வரும் பயங்கரசேதத்திற்குச் சத்துருக்களே பொறுப்பாளிகளென்று கடவுளுக்கும் மனிதனுக்கும்முன்பாய் உறுதிகூறுகிறேனென்று பிரசாதிபதி தம்படைகளுக் கறிவித்தாராம்.

இத்தாலியஅரசுடன் கலந்து யோசனைசெய்ய மெஸ், லாயிட்ஜார்ச்சும் பிரான்சியமந்திரியாரான மெஸ், பிரியாண்டும் சேனாபதிகளும் ருசியசெனறல் மெஸ், பால்டிமினுவும் அங்கு சென்றிருக்கிறார்கள்.

சென்ற 8உ பல்கேரியஅரசர் செர்மனியசக்கிரவர்த்தியைச்சந்தித்து வெகுநேரம்சம்பாஷித்தார். ஆஸ்திரிய இளவரசரும் சேனாபதியும் பல்கேரியஇளவரசரும் சேனைத்தலைவரும் செர்மன் சக்கிரவர்த்தியுடன் இருக்கிறார்கள்.

ஆஸ்திரியசக்கிரவர்த்தியும் சக்கிரவர்த்தினியும் பாப்பானவருக்குச் சமாதானவிஷமாய் எழுதிய கடிதத்துடன் ஒருதூதர் அங்குசென்றிருக்கிறார்.

பால்கன்.

முன்னேறிவந்தபல்கேரியபடையை ஐக்கியசேனைகள் துணிவாய்த்தாக்கித் திருப்பியடித்தனல் பல்கேரியர் ஓர்வரியைக்கடக்கையில் பலர்மூழ்கியிறந்தனர்,

கியுப்ரிஎன்றகிராமத்தை பிரித்தானியர்தாக்கிச் சத்துருக்களுக்குப் பெருஞ் சேதமுண்டுபண்ணி அனேகரைச் சிறைபிடித்தனர். சிமல்டோசிலும் லோகோவிக்யாவிலும் சத்துருஸ்தலங்களை நமது யுத்தக்கப்பல்கள்தாக்கின.

இத்தாலி.

சென்றவருடத்தில்வரவைவிடச்செலவு 7680 லட்சம் டலர் எனத்தெரிகிறது. உள்நாட்டுக்குப் பணத்தட்டுக்கேடுண்டாகாது. வெளிநாட்டுக்குப் பிரித்தானியரின்உதவி கிடைக்குமென நம்புகின்றனர்.

இதுவரையில் இத்தாலி 1200 சதுரமைல் விஸ்தாரமான நிலங்களைக் கைப்பற்றியிருக்கிறதென்றும் தனது போர்முகவிஸதீரணத்தில் 125மைல் குறைந்திருக்கிறதென்றும் 85000 ஆஸதிரியர் சிறைபிடிக்கப்பட்டார்களென்றும் இத்தாலியஅரசு தெரிவிக்கிறது. அத்துடன் இத்தாலியின் ஆயுதஉற்பத்திவேலையில் 569000 பேர் வேலைசெய்கிறார்களென்றும் அவருள் 78000 பேர் பெண்களென்றும் அறிவிக்கப்படுகிறது.

நோர்வே.

நோர்வேயிலிருந்து சுத்திசெய்யப்படாத லோகங்களும் மீன்களும் செர்மனிக் கனுப்பப்படுவதால் அதற்கு இங்கிலந்திலிருந்து நிலக்கரி ஏற்றப்படாதென்று உத்தரவுசெய்யப்பட்டது.

ருசியா.

ருசியர் மாசின்பிரைட்கெட்டுக்கருகில்பின்செல்லுகிறார்கள், ராவினிசாறுக்குத் தென்கிழக்கிலும் கிசாவுக்குத் தென்மேற்கிலும் சத்துருஸ்தலங்களை வசப்படுத்தி 8 ஆபீசருட்பட 272 பேரை ருசியர் சிறைபிடித்தனர்,

ஒல்லாந்து.

ஒல்லாந்தெல்லையில் செர்மனியர் தீவிரமாயரணமைக்கிருர்கள்.

ஒல்லாந்து எப்போதாவது யுத்தத்திற்பிரவேசிக்க நேரிடுமென்று தாம் யுத்தஆபத்திலிருந்து எதிர்பார்த்திருப்பதாய் யுத்தமந்திரி பார்லிமெந்து சபையிற்கூறினர். சமயம்வந்தபோது யுத்தத்திற்குச்செல்ல தமதுபடை ஆயத்தமாயிருக்கிறதென்றுஞ்சொன்னர்.

போர்த்துகல்.

போர்த்துக்கலில் நாலிடங்களில் கலகமுண்டாயின. துப்பாக்கி உபயோகிக்காமல கலகம்அடக்கப்பட்டது. இருவர் கைதிசெய்யப்பட்டனர்.

செர்மனி.

குற்றங்கள்செய்வதையே தொழிலாய்க்கொண்ட மறியற்காரரைநீக்கி மற்ற மறியற்காரரைப் போர்வீரராய்ச் செர்மனியில் திரட்டிவருகிருர்கள்.

செர்மனி ஆஸ்திரியா துருக்கி பல்கேரியா தேசங்களின் பார்லிமேந்து சபைகளின் அக்கிராசனபதிகளும் உபஅக்கிராசனர்களுஞ்சேர்ந்த காண்பரன்ஸ் ஒன்று பேர்னில் இம்மீ 19உ நடைபெறுமாம்.

5000 டன்நிறையுள்ள சப்மரின் கப்பல்களைச் செர்மனி செய்துவருகிறதென்றும் இதுவரையில் 2000 டன்நிறைக்கதிகமான சப்மரீன்கள் இல்லையென்றும் சென்ற ஆடிமீ 107 சப்மரீன்களே செர்மனி வசமிருந்ததென்றும் தற்போது 130முதல் 140 வரையில் சப்மரீன்கள் இருக்கின்றனவென்றும் சித்திரைமீ இன்னும் 20 புதியகப்பல்கள்கட்டி முடிவுறுமென்றும நோர்வேயும சுவேதனும் செர்மனிக்கு விரோதமாய்நடந்தால் அடக்கிநடக்கும்படி கட்டாயம்பண்ணச் செர்மனி பின்வாங்காதென்றும் ஓர் பிரான்சிய பத்திரிகை கூறுகிறதாம்.

செர்மனி சீக்கிரம் சமாதானத்தைநாடவேண்டுமென லீப்சிக்கில் ஒருகூட்டங்கூடப் பொலிசர் கலைத்துவிட்டனர்.

கைஇருப்பில் உணவுப்பொருளின்றிக் கதவுகளைமூடிய விடுதிச்சாலைகள்மேல் ,டெரஸ்டன்நகரஸ்திரிகள் கற்களைவாரிஎறிந்து கலகஞ்செய்தனர். சக்கிரவர்த்தியின அரண்மனைக்குமுன்பாயும் கலகஞ்செய்தனர். சக்கிரவர்த்தியை நிந்தித்தஸ்திரிகள் பிடிக்கப்பட்டிருக்கிருர்கள். பொலிசருக்கும் ஸ்திரிகளுக்கும் நடந்தகலகத்தில் 100 ஸ்திரிகள்வரையில் பலத்தகாயமடைந்தனர். ஆகாரப்பொருளை அரசு கொடுக்கவேண்டுமென்று பகிரங்கஞ்செய்த பத்திரங்களை அதிகாரிகள் நாசப்படுத்துகிருர்கள். செர்மனி வரவர நாசமடைந்துவருவதாய்த் தோன்றுகிறது.

செர்மனியில் ஆகாரப்பொருட்பஞ்சம் ஏற்பட்டிருக்கிறதென்றும் சனங்களுக்குட் சச்சரவுண்டாயிருக்கிறதென்றும் திருத்தவேலைமுற்ற வேலைகாரர்களை அதிகாரிகள் போர்முகத்துக்கு அனுப்பிக்கொண்டிருக்கிருர்களென்றும் செர்மனிக்குரிய பல சப்மரீன்கள் சேதமாய்விட்டனவென்றும் பேர்னில் வெகுகாலமிருந்து ஒல்லாந்துக்கு வந்த ஒருவர் சொல்லுகிருர்.

ஆஸ்திரியசக்கிரவர்த்தியின் மகுடாபிஷேகம்.

31உ ஆஸ்திரிய சக்கிரவர்த்தியும் சக்கிரவர்த்தினியும் புடாபெட்ஸ்நகரில் முடிசூட்டப்பட்டார்கள். ஆஸ்திரிய புராதனமுறைப்படி சகலசடங்குகளும் நடபடிகளும் நடந்தேறின.

யுத்தத்தையடுத்த செய்திகள்.

ஐயர்லந்தின்புகைரதப்பாதையை அரசாட்சி தன்மேற் பார்வைக்குள்ளாகத் தீர்மானித்தது.

கனடாவில் 600 தொழிற்சாலைகளில் யுத்தஆயுதங்கள் உற்பத்திசெய்யப்படுகின்றன. அதற்காகவருடச்செலவு முன்னிலும் இருமடங்காயிருக்கிறது.

புதியகப்பல்கள்செய்ய அல்லது வாங்க கப்பல்முதலாளிகளுக்கு 30 லட்சம்பவுண் கொடுத்துதவப் பிரான்சுஅரசாட்சி தீர்மானித்துவிட்டது.

ஆஸ்திரிய செர்மனியரிடமிருந்து தப்பிவந்த சேர்வியசிறையாளர் தம்மை போதியஆகாரம் உடைகளின்றி கஷ்டவேலைகொடுத்தது தொந்தரவுசெய்தார்களென்றும் ருஷியருக்கு விரோதமாய்ச் சேர்வியரைப் போர்செய்யும்படி யுத்தகளத்திற்குஅனுப்ப தாம் ஆஸ்திரியரிடமிருந்து தப்பிஓடிவந்ததாயும் தெரிவித்தார்களாம்.

துருக்கரின் கொடுமை—துருக்கர் ஆயிரக்கணக்கான ஆர்மீனியரைப் படுகொலைசெய்தனராம். மூன்றுமிடத்தில் குழந்தைகள் ஸ்திரிகள் ஆடவரின் பிரேதங்கள் ஆற்றுக்கணக்காய்க் குவிக்கப்பட்டிருந்தனவாம். அச்சரீரங்கள் சின்னபின்னப்படுத்தப் பட்டிருந்ததாம், ஸ்திரிகளின் பிரேதங்கள் நிருவாணமாய்க்கிடந்தனவாம். பெண்களும் குழந்தைகளும் 500 பேர்வரையில் பிட்லிஸ் என்னுமிடத்திலுள்ள கொட்டகையிற்கொண்டு சேர்த்து கர்த்தன்தசாதியாரை அனுப்பி இஷ்டப்படிவதைசெய்யும்படி ஏவினராம். ஒரு பள்ளத்தாக்கில் 5000 பேர் சித்திரவதை செய்யப்பட்டுக் கிடந்தனராம், பல ஆர்மீனியர் இக்கொடுமைக்கஞ்சி தற்கொலைசெய்துகொண்டார்களாம்.

இரத்தினத்திரயம்.

இது "யாப்பிலக்கணஆசிரியர்"எனத் தம்மைப் பாராட்டிய ஒருவர்க்குச் சன்மார்க்க அறிவுறுத்தும் நோக்கமாய் எழுதியனுப்பப்பட்டது. பொதுநயங்கருதிப் பிரசுரிக்கிறோம்.

இன்பகவி ராயரென எல்லோரும் போற்றுகின்ற
பொன்பொலியு மோர்புலவர் போதனையைத்—தன்செவியில்
வாங்காச் சினத்துடனே வந்தவழி செல்லுதலோ
நீங்காத் தவத்தார் நெறி.

நின்கோ தென்று நெறியறியா வாசகா
ஞானமான வாக்கதனை யுய்த்துக்—கானமோர
தன்போற் பிடிவாதந் தன்னைப் பயிற்றிவிட்டால்
என்பாடு தாமோ விகம்.

எப்புலவ ராஞனும் யாவருக்கு மேற்படி
தப்பி லிலாத் திருத்தந் தான்செய்தால்-ஒப்புவரோ
மூர்க்கர் முதலை முரண்பிடிபோ னிற்பவரோ
அகத்தை நீத்தார் பகர்.

பி. சுப்பராயின அபூர்வ ஆயுர்வேத அவுஷதங்கள்.

1 தாதுப்புஷ்டிமருந்து—அதன் குணத்தைஎழுதமுடியாது. அநுபோகத்தால் தெரிந்துகொள்ளலாம். தாதுநஷ்டம், பலஹீனம்,ஆண்தன்மைகெடல், பசியின்மை, கண்காலெரிவு, தேகவாட்டம் இந்திரியஸ்கலிதம், சொப்பனஸ்கலிதம், கைகால்இடுப்புமுதலிய அவயவங்களில் சோர்வு, வலி மேகசூடு, சோம்பல், பாண்டு,சோகை,மேகவெள்ளை, வெட்டை, நீரிழிவு, மதுமேகம், சதைவடைப்பு இன்னும் பற்பல சூதகரோகங்களைப்போக்கும்.சரீரபுஷ்டி, புருஷத்தன்மை, ஜீரணசக்தி, தாதுவிருத்தியையுண்டாக்கும். தாதைக்கெட்டிப்படுத்தும். டப்பா 1-க்கு விலை ரூபா 2 வி. பி. செலவு அணு 5 பிரத்தியேகம்.

2 அக்கினியார்த்தித்துமருந்து—பசியின்மை புளித்தஏப்பம், நெஞ்செரிச்சல், மலச்சிக்கல், வயிற்றுவலி வாய்நாற்றம், அஜீரணம். வயிற்றுப்பிசம்,தித்திவாயில்லாமை, பித்தஉபத்திரவங்களைச்சொஸ்தப்படுத்தும். பசிதீபனமும்தேகஆரோக்கியமுந்தரும். டப்பா 1-க்கு அணு 8. வி. பி, செலவு 1 அல்லது 2 டப்பாக்கள்வரையில் அணு 5 பிரத்தியேகம்,

3 பிரமேகநிவாரணி—எந்தக்காரணத்தினுல் உண்டாயிருக்கும் மேகவெள்ளை, வெட்டை நீர்கற்றல், நீர்தாரை எரிவு, சீழ், ரத்தம்வடிதல்முதலிய வியாதிகளை ஆண்பெண் இருதாரத்தார்களுக்கும் சொஸ்தப்படுத்தும். சீசா 1-க்கு விலைரூபா 1. வி.பி. செலவு 1முதல் 6 சீசாக்கள்வரையில் அனுப்ப அணு 5 பிரத்தியேகம்.

4 லக்ஷ்மீகஸ்தூரிமாத்திரைகள்—தாம்பூலந்தரிப்பவர்கள்கையிருப்பில் எப்பொழுதும்வைத்துக்கொள்ளவேண்டியவிலையுயர்ந்தவஸ்து. தந்தநோய் வாய்நாற்றம், அஜீரணம், பித்தவாய்வு இவைகளை நீக்கும். தாம்பூலத்துடனவது தனியாகவாவது சாப்பிட்டபின் 2 மாத்திரை உபயோகித்தால் எப்பேர்க்கொத்த கனத்தசாப்பாட்டையும் உடனேஜீரணம்செய்வதுடன் வாயில் அனேகமணிநேரம் சுகந்தவாசனையிருக்கும் பிரதிதினம்காலையில் 2 மாத்திரைகள் சாப்பிட்டால் நீடித்தஅக்கினிமந்தம், மலச்சிக்கல்,அஜீரணத்தினுலுண்டாகும் வயிற்றுழிவு, வயிறுநோய், நெஞ்செரிச்சல் முதலிய பற்பல வியாதிகள் தீரும். பிரசவகாலத்தில் தாம்பூலத்துடன், உபயோகித்துவந்தால் சன்னிகிட்டாது சன்னியில் கொடுக்கச் சன்னிதீரும். இதிலே ஒருவிதமுதலானயாதொரு அபாயகரமானவஸ்துவில்லை. காஷ்மீர்தேசத்திலிருந்து நேராக வரவழைத்த கஸ்தூரி, தங்கரேக், பச்சைக்கற்பூரம் முதலிய அனேக விலைபெற்ற மருந்துச்சாமான்களும் வாசனைத்திரவியங்களுஞ்சேர்த்துச்செய்யப்பட்டிருக்கிறது. தாம்பூலத்துடன் உபயோகித்தால் பச்சைக்கற்பூரம்முதலாகிய வாசனைவஸ்துக்கள் உபயோகிக்கவேண்டியது அனாவசியம், அரையிற் குழந்தைகள்முதல் வயதுசென்றவர்களுக்குச் சளி, இருமல் காசம் காலரு, பிளேக், சுரம் முதலானவைகளுக்கு வயதுக்குத்தகுந்தபடி 1 முதல் 4 மாத்திரைகள்வரையில் வெற்றிலைச்சாற்றில் கொடுக்கச்சுகமாகும். சீசா 1-க்குவிலை அணு 4 இந்தியாவில் 1 முதல் 12 சீசாக்கள்வரையில அனுப்பபாக்கிங்குதபால்சார்ஜ அணு5ம் சிலோனுக்கு அணு 7ம் பிரத்தியேகம்.

5 சர்வநோய்சம்ஹாரன்—இத்தைலம்கொஞ்சம்தேய்த்தால் கைகால் சந்துக்களின் பிடிப்பு வீக்கம், முடக்கம், மார்புநோய், சிலைநோய், கழுத்துநோய், பக்கசூலை, இடுப்புநோய், குதிகால்வலி, பாரிசவாயு, மேகவாயுமுதலான இன்னும் தேகத்திலுண்டாகும் எல்லாநோய்களையுஞ் சீக்கிரத்தில்குணப்படுத்தும். சீசா ஒன்றுக்குவிலைரூபா 1 வி பி செலவு ஒன்றுமுதல் 8 சீசாக்கள்வரையிலனுப்ப அணு5 பிரத்தியேகம்.

6 சுகந்தகூந்தல்தைலம்—இத்தைலத்தால் தலைமயிர் மீசை கண்இமை செழுசெழுப்பாகவும் நெருக்கமாகவும் வழுப்பாகவும் வளரும். கண்களைக் குளிர்ச்செய்யும். சகல கண்நோய்களும் தலைநோய்களும்நீக்கும். செம்பட்டைமயிர் கறுக்கும். மயிர்உதிராமல் காக்கும், கண்களுக்குப் பிரகாசத்தைத்தரும். விலை புட்டி 1க்கு அணு 8 வி பி செலவு ஒன்று இரண்டு சீசாக்கள்வரையிலனுப்ப அணு 5 பிரத்தியேகம்.

7 நேத்திரபிந்து—கண்ணோய் கண்ணுறுத்தல் கூசல் நீர்வடிதல் மங்கல் அந்திமாலை பீளைகட்டல் மாயிசம்வளர்ந்திருத்தல் பூவிழுந்திருத்தல் கண்சிவப்பு எரிச்சல் கண்இமை பருக்கள் இவைகளின் வலி கண்புகைச்சல் இவைகளைக் குணப்படுத்தும். மாணக்கர்களுக்கும் [illegible] வேலைசெய்பவர்களுக்கும் மிகவுஞ்சிறந்த ஔடதம், மருந்துஉபயோகித்தால் கண்ணுடி போடவேண்டியது அனாவசியம் சீசா 1 க்குவிலை அணு 8 வி பி செலவு 1முதல் 6 சீசாக்கள்வரையில் அணு 5 பிரத்தியேகம்.

8 கர்ணபிந்து—காதில் சீழ்வடிதல் வலி குத்தல் குடைச்சல் காதடைப்பு இரைச்சல் செவிடு இவைகளைக் குணமாக்கும். செவிடர்களுக்குக் கேட்கும். சீசா 1 விலை அணு எட்டு வி பி செலவு ஒன்றுமுதல் ஆறு சீசாக்கள்வரையிலனுப்ப அணு 5 பிரத்தியேகம்.

9 சாலபவடசம்காரம்—இடுப்பு அடையின் இடுக்கு முதலிய இடங்களில் உண்டாகி ஓயா தரைச்சலைத்தந்து வெகுகாலம் நிலைக்கிற மற்றுமிடங்களில் படரும் மேகப்படை சொறிசிரங்கு கரப்புப்படை தேமல்முதலியவைகளை அடியோடு குணப்படுத்தும். சீசா 1க்கு விலை அணு நாலு வி பி செலவு ஒன்றுமுதல் பன்னிரண்டு டப்பாக்கள்வரையிலனுப்ப அணு 5 பிரத்தியேகம்.

10 பேதிமாத்திரைகள்—வயிற்றில் வலி இரையில்லாமல் சுகமாய்ப்பேதியாகும். அஜீரணம் பித்தஉபத்திரவங்கள் சகலவாயு மலச்சிக்கல் அக்கினிமாந்தம் வாதம் கைகால்முதலிய அவயவங்களின் குடைச்சல் வலி சகலதாங்கள் முதலியவைகளை சொஸ்தப்படுத்தும்.சீசா 1க்கு அணுஎட்டு. வி பி செலவு 1முதல் 6சீசாக்கள்வரையில் அணு5 பிரத்தியேகம

11.— ஜ்வரசம்ஹாரி—நிராதகாட்பட்ட சுரங்கள், குளிர்சுரம், முறைசுரம், வாதசுரம் காமாலை,பிடரிவலி,இடுப்புவலி, விலாவலி,முழங்கால்வலி, உடம்புவெளுப்பு, மயக்கம், தாகம் இரண்டாமுறைச்சுரம், நாலாமுறைச்சுரம்முதலிய சகல சுரங்களை அடியோடுபோக்கும். டப்பா 1-க்குஅணு 5 வி. பி. செலவு பிரத்தியேகம்.

12. உரோமசம்ஹாரி—இத்தச்சூரணத்தில் மயிருள்ளவிடத்தில் தடவினுல் வெகு எளிதாக மயிர்நீங்கிவிடும்சீசா 1-க்குஅணு4. 1முதல் 6சீசாக்களவரையில்வி.பி. செலவுஅணு5 பிரத்தியேகம்

13. சுகந்தபல்பொடி—கல்ஜீரணசக்தியைத்தரும். பல்வலி எக்காலத்திலும் வராது.பல்எக்காலத்திலும்விழாது. சீசா 1-க்கு விலை அணு3 வி.பி செலவு 1 முதல் 5 சீசாக்கள் வரையில் அணு 5 பிரத்தியேகம்,

14. ஸ்தலிதநாஷிணி—பலவீனத்தாலும்,உஷ்ணத்தினுலும், சுகதின்பத்தில் பாலியத்தில் இழைத்து மூழ்கியிருந்த காரணத்தாலும், தூக்கத்திலும் சொப்பனத்திலும் இந்திரிய நட்டமாவதை நிற்பாட்டித் தேகதிடத்தைத்தரும் சீசா 1-க்கு அணு 8. வி.பி, செலவு 1 முதல்6 சீசாக்கள்வரையில் அணு 5 பிரத்தியேகம்.

15. உயர்ந்தகஸ்தூரி—மிகவுயர்த்தியானதும்முதல்தரமானதும் காஷ்மீர்தேசத்திலிருந்து நேராக வரவழைத்த கஸ்தூரி நம்மிடத்தில் எப்போதும் கிடைக்கும். தோலா 1-க்கு ரூபா 48 ஒருரூபாய்க்குக்குறையாமல் சில்லறையிலும்விற்கப்படும். வி. பி. செலவு பிரத்தியேகமாகும்.

16. தேள்கொட்டின்மருந்து—இம்மருந்தைவிஷந்தீண்டிய இடத்தில் தடவினுல் தக்ஷணமேவிஷமிறங்கி வருத்தப்பட்டுச சகிக்கமுடியாதவேதனையில்லன்றுநீங்கி யாவரும் ஆச்சரியப்படத்தக்கவிதமாய்ஆனந்திக்கும்படியான அநுகூலத்தைத்தரும். கிரயம் சீசா 1-க்கு அணு 4. இந்தியாவிலும் பர்மாவிலும் 1 முதல் 12 சீசாக்கள்வரையிலும வி பி. செலவு அணு 5 பிரத்தியேகம்.

முக்கியகுறிப்பு—ஒரேதடவையில் 12 சீசாவுக்குக்குறையாமல்தேள்கொட்டின் மருந்தில் வாங்கினுல் டஜன் 1-க்குரூபா 2-8-0 வீதங் கொடுக்கப்படும். வி.பி. செலவு அணு 5 பிரத்தியேகம் இக்குறிப்புதேள் மருந்துதவிர மற்றெந்த மருந்திற்கும் சம்பந்தப்படமாட்டாது.

17, மேகரணமருந்து—இதைவெள்ளைத்துணியில்தடவிரணங்களின் மேல்போட அரையாப்பு கண்டமாலை, விப்புருதி, தொடைவாழை,செவ்வாப்பு, ஆசனப்பவுத்திரம், அழுகுனியன், பிளவை, கிரந்தி, மேகவெடிப்பு, இலிங்கப்புற்றுயோனிப்புற்று, முதலிய இரணங்கள் ஆறிசொஸ்தமாகும். விலை சீசா 1-க்கு அணு 8. இந்தியாவிலும் பர்மாவிலும் 1 முதல் 3 சீசாக்கள்வரை வி. பி, செலவு அணு 5 பிரத்தியேகம்.

18. கண்டசுத்திமாத்திரைகள்—டைரக்ஷனில் சொல்லியபடி இதைச்சாப்பிட்டுவந்தால் தொண்டைக்கட்டு,தொண்டைசமயலை நீக்குவதன்றி இலயமாய்ப் பாடுவதற்குஇசைந்த குரலையுந்தரும்.சங்கீதவித்வான்களுக்கும் பிரசங்கஞ்செய்பவருக்கும் உபாத்தியாயர்களுக்கும்இது ஓர் அமையா ஔஷதம், எத்தனைநேரம்பாடினுலும் பிரசங்கித்தாலும் குரல் கம்மாது.இனிமையானபேசசையைத்தரும். விலைசீசா 1-க்கு அணு8, இந்தியாவிலும் பர்மாவிலும் 1 முதல் 6 சீசாக்கள்வரையில் பாக்கிங்கு தபால்முதலியசெலவு அணு 5 பிரத்தியேகம்.

19 . சுகந்தஸ்நானப்பொடி— இந்த வாசனைப்பொடியைத் தினந்தோறும் தேகத்தில்தேய்த்து ஸ்நாநஞ்செய்துவந்தால் தேகத்திற்குச் சுகந்த பரிமளத்தைத்தந்து தேமல், அரிப்பு, சொறி, சிரங்கு, கற்றுழைநாற்றம், கைகால் எரிச்சல் மேகசாங்கை, சரீரவாட்டம், கணைச்சூடு, வெடிப்பு, கரப்பான், தலைவலி, பொரிமேகம், படர்தாமரை, மேகவூறல், கிரந்திமுதலிய இன்னும் அனேகவிததோலைப்பற்றிய வியாதிகள் தீரும். நல்லவாசனையும் காந்தியும் லக்ஷ்மீகரமும் ஆரோக்கியமுமுண்டாம். அரைதிட்டுக்குழந்தைமுதல் யாவரும் உபயோகிக்கலாம். டப்பா 1-க்கு விலை அணு 8, வி. பி. செலவுஅணு 3 பிரத்தியேகம்!

20 சஞ்சீவிமாத்திரைகள்—இம்மாத்திரைகளினுல் தலைவலி, தலைபாரம், சளி, இருமல், சுரம், மயக்கம், வாந்தி, விஷசுரம், இசிவு, வயிற்றுப்பிசம், வயிற்றுவலி, தெற்குத்திக்கை முதலியநோய்கள்தீரும். அரைக்குழந்தைமுதல் யாவருமுபயோகிக்கலாம். விலை சசா 1-க்கு அணு10 இந்தியாவிலும் பர்மாவிலும் 1 முதல் 6 சீசாக்கள்வரையில் அனுப்ப வி. பி. முதலிய செலவுகள் அணு 5 பிரத்தியேகம்.

21.மஹாகோரோசனைமாத்திரை—இம்மாத்திரையினுல் இருமல், சளி, சுரம், வயிற்றுப்பிசம், இளைப்பு, கல்மயக்கம், தெற்குத்திக்கைசன்னி, வயிற்றுப்போக்கு, தோஷம், முக்குமாந்தம் மாந்தகணம், செவ்வாப்பு, கடுவான், காப்பன் பால்மாந்தம்முதலியவல்லாமாந்தங்களும், கருங்கிரந்தி செங்கிரந்தி மலசலக்கட்டு முதலியதுகளும், வைசூரம் முறைசுரம்முதலான பாலித சுரங்களும் அடியோடு நீக்கும் சீசா 1-க்கு விலைஅணு 1. 1 முதல் 6 சீசாக்கள்வரையில், வி, பி, செலவு அணு பிரத்தியேகம்.

எனது விலாசம்
பி.சுப்பராய்
ஆயுர்வேதஔஷதசாலை
ஸ்ரீ வெங்கடேசபெருமாள்கோவில் சன்னதி
தஞ்சாவூர்

☞ MY ADDRESS
P. SUBBRAOY
Ayurvedic Pharmy
Sri Venkedasa
Perumal Koil
Sannathy
Tanjore

Jaffna Commercial Corporation Ltd
யாழ்ப்பாண வியாபார சமுதாயம்



இச்சமுதாயத்தாரின் யாழ்ப்பாணப் பிரதானகடையிலும், சுன்னாகம், சங்கானை, சாவகச்சேரி, பருத்தித்துறை, அனுராதபுரம், மட்டக்களப்பு என்னும் கிளைச்சாப்புகளிலும் யாழ்ப்பாணமாதிரியாய்ச் சீமையிற் தனி உருக்கிற் செய்யப்பட்ட "பித்தல்" "குளேச்ச" மண்வெட்டிகள், தெருவேலை மண்வெட்டிகள், கோடரிகள், பிக்கான்கள் விற்பனவுக்கிருக்கின்றன.

Wm. Mather,
Managng Director

வீடுகளிலும் பள்ளிக்கூடங்களிலும் கோயில்களிலும் சட்டம்போட்டு வைக்கக்கூடிய
முழு வர்ணமேற்றிய வார்ணிஷ் படங்கள்.

Chromo and Oleograph pictures.

சுவாமி படங்கள். [Religious Pictures]

திருஇருதயம், மாதாஇருதயம். திருக்குடும்பம், வியாகுலமாதா, ஆரோக்கியமாதா, அடைக்கலமாதா, சூசையப்பர், இராயப்பர், சின்னப்பர், அந்தோனியார் *etc etc* இன்னும் மற்ற வேடிக்கைப் படங்களும் சண்டைப்படங்களும்.

29×22	ஒவ்வொன்று	1—0—0
25×18	ஷை	0—10—0
20×16	டஜன்	3—8—0
17×13	டஜன்	1—10—0
10×8	டஜன்	0—7—0

செபப்புஸ்தகப்படங்கள் 100க்கு 1—8—0
செபப்புஸ்தகப்படங்கள் உயர்ந்தது டஜன் 0—6—0 இருந்து ரூபா 1—0—0 வரைக்கும்
அல்மேனியம் உத்தரிய சுரூபங்கள்.
வட்டம் சிறியஅளவு டஜன் 0—3—0 இருந்து 0—6—0 வரைக்கும்
வட்டம பெரியஅளவு டஜன் 0—6—0 இருந்து 0—10—0 வரைக்கும்
சதுரம் டஜன் 0—8—0
வெள்ளி உத்தரிய சுரூபம் வட்டம் ஒவ்வொன்று —8—00
ஷை ஷை சதுரம் ஷை 0—12—0
சிறப்பு கர்மேல் உத்தரியம் 144 அடங்கிய ஒரு குரோஸ்பெட்டி 3—12—0
வியாகுலமாதா உத்தரியம் ஷை ஷை 4—0—0
தேங்காய்ச் சிரட்டை ஜெபமாலைகள் டஜன் 1—11—0
தொட்டிலில்வைத்த குழந்தை சுரூபங்கள் 2 அங்குலம் 1—4—0
Made of wax 3 அங்குலம் 2—0—0
1917ம் வருஷத்திய பலவிதவேடிக்கைகாலண்டர்கள் டஜன் ரூபா 1—0—0 இருந்து ரூபா 9—0—0 வ

வெள்ளை டிவில் ஷர்ட்டு	1—ம்	நம்பர்	1—8—0
ஷை	2—ம்	நம்பர்	1—4—0
ஷை	3—ம்	நம்பர்	1—1—0
காக்கி டிவில் ஷர்ட்டு	1—ம்	நம்பர்	1—12—0
ஷை	2—ம்	நம்பர்	1—10—0

ஜாமான்கள் வேண்டியவர்கள் கீழ்கண்ட விலாசத்துக்கு எழுதினுல V. P. மூலமாய் அனுப்பப்படும்.

டி. ஹாயிஸ் அண்டு கோ.
பெரியகடைவீதி.
திருச்சினுப்பள்ளி.

Printed and published by S Tambimuttupillai at his Atchuvaly
Gnanapragasa Yanthira office, Atchuvaly, Jaffna